வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 05    12.07.2024 வெள்ளிக்கிழமை    இதழ் : 194    பக்கங்கள் : 12







### ரயில் துறையினரின் வேலைநிறுத்தம்

# பணி நீக்க உத்தரவையடுத்து நேற்றிரவுடன் முடிவுக்கு வந்தது



கொழும்பு, ஜூலை 12

"பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டளர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டவர்களாக கருதப்படுவர்", என்று குறிப்பிட்டு அரசாங்கம் உத்தியோக பூர்வ கடிதம் அனுப்பியமையைத் தொடர்ந்து ரயில் துறையினரின் போராட்டம் நேற்றிரவு நிறைவுக்கு வந்தது.

11



## வெளிநாட்டிலிருந்து யாழ். திரும்பியவர் விபத்தில் பலி!

கிளிநொச்சி, ஜூலை 12

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த ஹைஏஸ் வாகனம் முன்னால் சென்று கொண்டிருந்த லொறியை மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை ஏ-9 வீதியில் திருமுறிகண்டியில் இந்த விபத்து

11

## விபத்தில் படுகாயமடைந்த முன்னாள் தவிசாளர் மரணம்



வடமராட்சி, ஜூலை 12

விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் தவிசாளர் வேலுப்பிள்ளை நவரத்தினராசா சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை உயிரிழந்தார்.

இது குறித்து மேலும் அறிய வருபவை வருமாறு,

முன்னாள் தவிசாளர், கடந்த மாதம் 29ஆம் திகதி முல்லைத்தீவுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். புளியம்பொக்கணையில் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடையில் அவரின் மோட்டார்

11

## ரவிராஜ், பரராஜசிங்கம், மகேஸ்வரன் கொலைகளுக்கு நீதி கிட்டவேண்டும்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, ஜூலை 12

ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம், மகேஸ்வரன் ஆகியோரை கொலை செய்தவர்கள் சட்டத்தின் முன்நிறுத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாட்டில் சட்டம் ஒழுங்கு தொடர்பில் பல பாரதூரமான பிரச்னைகள் எழுந்துள்ளன. அத்துடன், சமூகம் எங்கும் வன்முறைகள் தலைவிரித்தாடுகின்றன. இது தொடர்பில் நாட்டு மக்கள் மிகவும் அச்சமடைந்துள்ளனர். இந்த விவகாரத்தை அரசியலாக்க நான் ஒருபோதும் முயற்சிக்க மாட்டேன்.

சமூகத்தில் குடிமக்களின் பாதுகாப்பை உறுதி

11

## சீனாவுடனான உறவுகளை ஆழமாக்குங்கள்!



கொழும்பு, ஜூலை 12

அபிவிருத்தி மற்றும் சவாலான காலங்களில் சீனாவின் நிலையான ஆதரவை

11

### கோபல்ட் தனிமம் ஆய்வு

## இந்தியா - இலங்கை இடையே முரண்பாடு

சென்னை, ஜூலை 12

இந்து சமுத்திரத்தின் கடல்மலையில் கோபல்ட் தனிமம் குறித்த ஆய்வில் ஈடுபடும் இந்தியாவின் முயற்சிக்கு இலங்கை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்து சமுத்திரத்தின் அபனாசி நிக்கிட்டின்

11

## வடக்கு, கிழக்கு அரசியல் இனி எங்களுக்கு கீழேயே!

### அறிக்கை விடுத்தார் கருணா

மட்டக்களப்பு, ஜூலை 12

இனி எங்களுக்கு கீழ் வடக்கு - கிழக்கு அரசியல் நடவடிக்கை நடைபெறும். தலைவர் பிரபாகரன்மீதும் தமிழ்மீதும் பற்றுடைய அனைவரும் தன்னுடன் இணைய வேண்டும் - இவ்வாறு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலை வரான கருணா என்று அறியப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன்.

11

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன இன்று யாழ்ப்பாணம் வருகிறார்!



யாழ்ப்பாணம், ஜூலை 12

பிரதமர் தினேஷ் குணவர்த்தன இன்று வியாழக் கிழமை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணம் வரும் பிரதமர், காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பார். இதன் பின்னர், சுன்னாகத்தில்

11

### யாழ். போதனா மருத்துவமனையில்

## தற்கொலை முயற்சியால் 1,000 பேர் வரை சிகிச்சை!

- சி. சிலக்சன் -

யாழ்ப்பாணம், ஜூலை 12

தற்கொலை முயற்சிகளால் பாதிக்கப்பட்டு கடந்த ஆண்டு ஆயிரம் பேர் வரையானோர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று யாழ். போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சை பிரிவின் மருத்துவ நிபுணர் முத்துலிங்கம் நவநீதன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். போதனா மருத்துவமனையின்

11

## அதிகரிக்கும் விபத்துகளால் யாழ். போதனாவில் நெருக்கடி!

- வீதி விபத்தால் 100 பேர் வரை மரணம்
- ஏனைய விபத்தால் 200 பேர் வரை பலி

- சி. சிலக்சன் -

யாழ்ப்பாணம், ஜூலை 12

விபத்துகளில் காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால், அவர்களுக்கு சிகிச்சையளிப்பதில் நெருக்கடிகள் காணப்படுகின்றன. எனவே, பொதுமக்கள் விபத்துகள்

11

## கொக்குத்தொடுவாய் புதைகுழி 3 மனித எலும்பு எச்சங்கள் மீட்பு!

முல்லைத்தீவு, ஜூலை 12

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வின் 7ஆம்நாளான நேற்று 3 மனித எலும்புக்கூடு எச்சங்கள் மீட்கப்பட்டன. இதன் மூலம் அங்கு மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 43ஆக அதிகரித்துள்ளது.

இதேநேரம், நேற்றையதினம் த. வி. பு. ஓ3035 என்று பொறிக்கப்பட்ட தகடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்ட தாக முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி க. வாசுதேவா தெரிவித்தார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

துருக்கி நாட்டைச் சேர்ந்த அறிஞர், கல்விமான் முல்லா பற்றி முன்னரும் இந்தப் பத்தியில் பல தடவைகள் சொல்லியிருக்கிறேன்.

அவர் பற்றிப் பேசப்படும் பல கதைகளில் ஒன்று படிக்கக் கிடைத்தது. அதனை முதலில் தருகின்றேன்.

சந்தை கூடும் இடத்தில் ஓர் உயர்ந்த இடத்தில் முல்லா நின்று கொண்டார்.

மக்கள் சந்தையை நோக்கிப் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தனர்.

“அன்பார்ந்த நண்பர்களே? உங்களுக்கு - உங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற அருமையான சில யோசனைகள் என்னிடம் இருக்கின்றன. இவற்றைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும் என்று நினைப்பவர்கள் அருள் கூர்ந்து சற்று நில்லுங்கள்“ என்று முல்லா உரத்த குரலில் கூறினார்.

முல்லா என்ன சொல்லப் போகிறார் என்று அறிந்து கொள்வதற்காக ஒரு பெருங்கூட்டம் அங்கே கூடிற்று.

“நண்பர்களே! கொஞ்சங்கூட உடல் உழைக்காமல் வீட்டில் இருந்தவாறே ஆயிரக்கணக்கில் சம்பாதித்து சுகபோக வாழ்வு வாழ உங்களில் எத்தனை பேருக்கு விருப்பம்? நான் அதற்கு வழி சொல்கிறேன் என்னுடைய யோசனைகளைக் கேட்கத் தயாராக இருப்பவர்கள் எத்தனை பேர்? அவர்கள் மட்டும் கைதூக்குங்கள்“ என்றார் முல்லா.

அநேகமாக அங்கே இருந்த அத்தனை பேரும் கை தூக்கினார்கள்.

“முல்லா உழைக்காமல் சுகபோக வாழ்வு வாழ என்ன வழி? தயவு செய்து கூறுங்கள்?” என்று மக்கள் கூச்சலிட்டனர்.

முல்லா தாம் நின்றிருந்த இடத்தை விட்டுக் கீழிறங்கி நடக்கத் தொடங்கினார்.

“என்ன முல்லா அவர்களே, ஒன்றும் சொல்லாமல் செல்கிறீர்களே...?” என்று மக்கள் கேட்டனர்.

“நண்பர்களே நமது ஊரிலே எத்தனை சோம்பேறிகள் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பினேன். என்னையும் சேர்த்து இந்த ஊரில் உள்ள எல்லோருமே சோம்பேறிகள்தான் என்ற உண்மை எனக்கு விளங்கி விட்டது. இனி எனக்கு இங்கே என்ன வேலை? போய் வருகிறேன்“ என்று கூறியவாறே முல்லா நடக்கத் தொடங்கினார்.

அங்கிருந்த மக்கள் திகைப்படைந்தவர்களாக முல்லா சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நேற்றுமுன்தினம் ஒரு திருமண வைபவத்துக்கு சென்றிருந்தபோது, அங்கே இருந்த நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன், என்னைக் கண்டதும் கேட்டார், “என்ன ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா?” என்று.

“உயர்நீதிமன்றமும் வியாக்கியானம் செய்துவிட்ட பின்னர் இனி தேர்தல் நடக்கத்தானே வேண்டும்” என்று அவருக்குக் கூறிவிட்டு, தொடர்ந்து சில விடயங்களை பேசிக்கொண்டிருந்தோம்.

வைபவம் முடிந்து வீடு வந்த பின்னர்தான் அவர் ஏன் இப்போதும் அப்படிக் கேட்டார் என்று மனது எனக்குள் கேட்டுக்கொண்டது. உயர்நீதிமன்ற நீதியரசராக பல ஆண்டுகள் பணியாற்றிய ஒருவர் - தற்போது பாராளுமன்றத்திலும் இருக்கின்ற ஒருவருக்கு அப்படியொரு சந்தேகம் ஏன் இன்னமும் இருக்கின்றது என்று யோசிக்காமல் இருக்கமுடியவில்லை.

உயர்நீதிமன்ற தீர்ப்பு வந்த பின்னரும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முயற்சி செய்கிறார் என்றும் ஆனால், எந்த காரணத்தாலும் இனித் தேர்தலை ஒத்திவைக்கமுடியாது எனவும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பும் அறிக்கை வெளியிட்டிருந்தது. தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமாரவும், “உயர்நீதிமன்ற தீர்ப்பின் பின்னரும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முயற்சி செய்கிறார் - அது சாத்தியமாகாது”, என்று தெரிவித்திருக்கிறார்.

அப்படி என்னதான் முயற்சி நடக்கின்றது என்பதை அறிய தெற்கின் முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவருடன் பேசினேன்.

அப்போது அவர் சொன்னார், “இது எல்லாம் ரணிலின் வழக்கமான வேலைகள்தான். அவருக்கும் பொதுஜன பெரமுனவுக்குமிடையே ஏற்பட்ட தில்லுமுல்லு இன்னமும் தீர்க்கப்படவில்லை. அவரோ பெரமுன தூர இருந்து தனக்கு ஆதரவு தரவேண்டும் என்று நினைக்கின்றார். அவர்களின் கட்சிக்காரர்களில் பெருந்தொகையானவர்கள் அவருக்கு நேரடியாக - அதேவேளை தனிப்பட்ட முறையில் ஆதரவு வழங்கத் தயாராக இருக்கின்றனர். அந்த ஆதரவு போதுமானது என்றும் பெரமுன தன்னை ஆதரித்து அறிக்கை வெளியிட்டுவிட்டு அமைதியாக இருந்தாலே போதுமானது எனவும் நினைக்கின்றார். அப்படி தாங்கள் இருந்தால், தமது கட்சியில் யாருமே எஞ்சமாட்டார்கள் என்றும் அதனால் அப்படி இல்லாமல் பெரமுனவின் ஆதரவு வேட்பாளராகவே அவர் களம் இறங்கவேண்டும் எனவும் பெரமுன நினைக்கின்றது. அவர்களுக்குள்ளும் குடும்ப சண்டைகள் ஒன்றும் இரகசியமானவையல்ல. இதனால், அவர்களுக்குள்ளும் ஒருமித்த முடிவை எடுக்க முடியவில்லை. இரு தரப்பினரிடையேயும் ஏற்பட்டிருக்கும் இந்தத் தில்லுமுல்லு தீர்க்கப்படும்வரை ரணிலால் தேர்தலில் போட்டியிடும் தனது முடிவை அறிவிக்க முடியாது.

இப்படி தேர்தலை ஒத்திவைக்க முயற்சிப்பதுபோல சில சமிக்ஞைகளை காட்டிக்கொண்டிருந்தால், எதிர்க்கட்சிகளின் கவனம் அதில் மட்டுமே இருக்கும். தமக்கிடையேயான பிணக்குகள் தீர்ந்த பின்னர் தேர்தல் பற்றிய அறிவிப்பை வெளியிட்டுவிட்டு முழுவீச்சில் இறங்கலாம் என்று அவர் திட்டமிட்டிருக்கிறார் என்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

மேலே சொன்ன முல்லாவின் கதைதான் இப்போது ஞாபகத்துக்கு வந்தது.!

- ஊர்க்குருவி.

# தேர்தலை பிற்போடுவதற்கு முயன்றால் ஜனாதிபதியை மக்கள் விரட்டியடிப்பர்!

## சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

“ஜனாதிபதித் தேர்தலை ஒக்ரோபர் 17 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தியாக வேண்டும். அதுதான் அரசமைப்பு ஏற்பாடு. ஏதேனும் வகையில் அதை குழப்பி தேர்தலை பிற்போட முயற்சித்தால் ஜனாதிபதியையும் இந்த அரசையும் மக்கள் ஓட ஓட விரட்டியடிப்பர்கள்.”

- இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் நடந்த ஒத்திவைப்புவேளை பிரேரணையில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 வருடங்கள்தான் என்பது அரசமைப்பிலும் தெளிவாக உள்ளது. அதை இப்போது உயர்நீதிமன்றமும் தெளிவுபடுத்தி விட்டது. இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பான அரசமைப்புப் பிரிவுகளில் மாற்றம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டிய தேவை எதுவும் இல்லை.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஆறு வருடங்களுக்கு மேல் நீடிப்பதாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற அரசமைப்பின் 83 (ஆ) பிரிவு இந்த விடயங்களில் சம்பந்தப்பட்டது அல்ல. அதை மாற்றி அமைக்க வேண்டிய தேவையும் இல்லை. அதை மாற்றி அமைப்பதாயின் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவை என்ற கருத்து இருந்ததாலேயே 19ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டபோது அதை மாற்றாமல் அப்படியே விடுகின்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் இணக்கத்தோடுதான் அப்படியே அதை விட்டுவிட முடிவு எடுக்கப்பட்டது. அதனால் சர்ச்சைகளோ குழப்பங்களோ ஏதுமில்லை. ஏற்கனவே, ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள்தான் என்பது திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்பட்ட விடயம். இந்த 83 (ஆ) பிரிவு அரசமைப்பில் இருப்பதால் எந்தக் குழப்பமும் புதிதாக வந்துவிடாது.

ஆனால், இந்தப் பிரிவுக்கு திருத்தம் கொண்டு வருகின்றோம் என்று குழப்பத்தை ஏற்படுத்த ஜனாதிபதியின் தரப்பினர் முயல்கின்றனர் என்று தோன்றுகின்றது. அந்தப் பிரிவைத் திருத்த சர்வஜன வாக்கெடுப்பு என்ற நிலைப்பாடு வருமானால், அதைக் காட்டி தம்முடைய பதவிக்காலம் 5 வருடங்கள்தானா என்பதை ஒட்டிய சர்ச்சையை கிளப்பலாம் என்று ஜனாதிபதி எண்ணுகின்றார் போலும்.

எது, எப்படி என்றாலும், நாடு வரும் ஒக்ரோபர் 17 இற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. அது சட்ட ரீதியான கட்டாயம். அதில் கை வைக்க அல்லது தேர்தலை தள்ளிப்போட முயற்சி எடுக்கப்பட்டால் அரசையும் ஜனாதிபதியையும் மக்கள் வீதி வீதியாக துரத்தி அடிப்பார்கள் - ஓட ஓட விரட்டுவார்கள். இதனை முன் எச்சரிக்கையாகக் கூறி வைக்க விரும்புகின்றேன்.” - என்றார்.

(ஐ)

# இலங்கையை சேர்ந்த பெண் பயணி நடுவானில் மரணம்!

## கராச்சி விமான நிலையத்தில் விமானம் தரையிறக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 12

இலங்கையை சேர்ந்த பெண் பயணியொருவர் நடுவானில் உயிரிழந்ததைத் தொடர்ந்து பயணிகள் விமானமொன்று அவசர அவசரமாக பாகிஸ்தானின் கராச்சி விமான நிலையத்தில் தரையிறங்கியது.

இலங்கையை சேர்ந்த 57 வயதான பலவினி என்ற பெண்ணே உயிரிழந்தார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

டுபாயிலிருந்து கொழும்புக்கு பயணித்துக் கொண்டிருந்த விமானத்திலிருந்த குறிப்பிட்ட பெண் பயணியின் உடல்நிலை திடீரென மோசமடைந்ததாகவும் இதனை தொடர்ந்து விமானி கராச்சி விமான நிலையத்தில் விமானத்தை தரையிறக்குவதற்கான வேண்டுகோளை விடுத்தார் எனவும் தகவல்கள் வெளியாகின.

விமானம் தரையிறங்கியதும் உடனடியாக பாகிஸ்தானின் சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையை சேர்ந்தவர்கள் மருத்துவப் பரிசோதனைக்காக விமானத்திற்குள் ஏறினர்.

அவர்கள் சிகிச்சையளித்த போதிலும் இலங்கை பெண் உயிரிழந்தார். அவர் மாரடைப்பால் மரணமானார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பெண்ணின் மரண சான்றிதழ் பெறப்பட்டதைத் தொடர்ந்து குறித்த பெண்ணின் உடலுடன் விமானம் கொழும்புக்கு திரும்பியது.

(அ -ஐ)

# நான்கு வயது சிறுமிக்கு மது பருக்கிய தாய் மாமன்

கொழும்பு, ஜூலை 12

நான்கு வயதான சிறுமிக்கு மதுபானத்தை பருக்கினார் என்ற குற்றச்சாட்டில் அவரின் தாய் மாமனான 31 வயதான நபர் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒல்டன் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்ப குமார தெரிவிக்கையில்-

உலப்பனை பகுதியைச் சேர்ந்த குழந்தையின் தாய் குடும்ப வறுமை காரணமாக 18 மாதங்களுக்கு முன்பு வெளிநாடொன்றுக்கு பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார். வெளிநாட்டுக்கு தாய் சென்றபோது, தன்னுடைய 9 வயதான மகனையும் 4 வயதான மகளையும் சாமிமலை, ஒல்டன் தோட்டத்தில் உள்ள தனது தாய் வீட்டில் ஒப்படைத்து விட்டுச் சென்றுள்ளார்.

பிள்ளைகளை பார்ப்பதற்காக தாயின் வீட்டுக்கு அடிக்கடி வரும் தாய் மாமன் சிறுமிக்கு மதுவைப் பருக்கியுள்ளார்.

இதனை சிறுமியின் 9 வயதான அண்ணா கண்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்தே அந்த நபர், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேநபர், ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டார். அப்போது, சந்தேக நபரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(அ)

# 100 வயதை கடந்தவர்கள் நாட்டில் 456 பேர்

கொழும்பு, ஜூலை 12

நாட்டில் 100 வயதை கடந்தவர்கள் 495 பேர் இருக்கின்றனர் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

முதியோர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு உதவித் தொகையைப் பெற இந்த நபர்களுக்கும் உரிமை உண்டு என்று அவர் குறிப்பிட்டார்.

“60 வயதுக்கு மேற்பட்டோர் 27 இலட்சம் பேர் உள்ளனர். இந்நிலையில், ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டுக்குள் 10 இலட்சத்தை தாண்டும் என்றும் குறிப்பிட்டார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
12.07.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், ஆனி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பாராளுமன்றத்தில் இரு குழுக்களா?

தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற குழுத் தலைவர் யார் என்னும் உறுதியான தீர்மானத்துக்கு வர முடியாமல் இருப்பதாகவே தெரிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று ஒன்று தற்போதில்லை. ஆனாலும், பாராளுமன்ற குழுவில் எவ் வித மாற்றங்களையும் கட்சிகள் இதுவரையில் ஏற்படுத்தவில்லை. இரா. சம்பந்தன் இறக்கும்வரையில் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவராகவே இருந்தார். அவரை அவ்வாறு இருக்க வேண்டாமென்று பங்காளிக் கட்சிகள் வலியுறுத்தியிருக்கவில்லை.

உள்ளூராட்சித் தேர்தலை காரணம் காண்பித்தே இலங்கைத் தமிழ் அரசு கட்சி தனியாகச் சென்றது. அப்போது அதனை தடுக்கும் முயற்சிகளை சம்பந்தன் மேற்கொண்டிருக்கவில்லை. அவர் இயங்க முடியாத நிலையில் இருந்திருந்தாலும்கூட, தமிழ் அரசு கட்சியின் முடிவுகளில் தலையீடு செய்ய முடியாதளவுக்கு இருந்திருக்கவில்லை. இந்தநிலையில் சம்பந்தனையும் சாட்சியாகக் கொண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைவுற்றது. ஆனாலும், பாராளுமன்றத்தில் வழமைபோலவே ஓர் அணியாகவே கட்சிகள் இயங்கியிருந்தன. சம்பந்தனின் மறைவைத் தொடர்ந்து பாராளுமன்ற குழுத் தலைவரைத் தெரிவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து அடுத்த தலைவரை தெரிவு செய்ய முடியும். அனுபவத்தின் அடிப்படையில் அந்தப் பொறுப்பை கூட்டமைப்பின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒரு கட்சியான ரெலோ கோருகின்றது. அதனைக் கோருவதற்கு அவர்களுக்கு தகுதியுண்டு - அதனை மறுக்க முடியாது. இந்த நிலையில் ரெலோ அந்தப் பொறுப்பை ஏற்கவேண்டுமாயின், அதற்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவு தேவை.

ஆனால், அதில் இழுபறிகள் காணப்படுகின்றன என்றே தெரிகின்றது. பாராளுமன்றத்தில் ஒற்றுமையாக செயல்பட வேண்டுமாயின் அனைவரும் ஒன்றுபட்டு தீர்க்கமான முடிவு ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பாராளுமன்றத்தில் இரு குழுக்களாக இயங்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். இது தமிழ்த் தேசிய அரசியலுக்கு உகந்தது அல்ல.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் ஒரு சிறிது காலத்துக்குத்தான் இந்த நடைமுறை இருக்கப்போகின்றது. இந்தக் குறுகிய காலத்துக்குள் ரெலோவிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பதால் தமிழ் அரசு கட்சிக்கு எந்தவோர் அரசியல் நஷ்டமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. மேலும், எதிர்காலத்தில் ஒற்றுமையாக பயணிப்பதற்கான சந்தர்ப்பமாகவும் இதனைப் பயன்படுத்தலாம்.

கடந்த பதினைந்து வருடங்களாக தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டதால் எந்தவோர் அரசியல் கட்சியும் எதனையும் சாதிக்கவில்லை. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தில் ஓர் அங்குலம்கூட முன்னோக்கிப் பயணிக்க முடியவில்லை. இந்த அனுபவங்களிலிருந்து அனைவரும் பொறுப்புடன் சிந்திக்க முன்வர வேண்டும்.

# பாடசாலை பஸ் சேவையை மேலும் விரிவுபடுத்த திட்டம்

கொழும்பு, ஜூலை 12

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் இயக்கப்படும் சிசுசரிய திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 2005ஆம் ஆண்டு முதல் சிசு சரிய திட்டத்தை பாடசாலை மாணவர்களுக்கு மானிய கட்டண முறையின் கீழ் பாதுகாப்பான பஸ் சேவையை வழங்கும் நோக்கத்துடன் தொடங்கியது.

இதன் மூலம் பாடசாலை மாணவர்கள், மன மற்றும் உடல் அசௌகரியம் இன்றி சரியான நேரத்தில் பாடசாலைக்கு சென்று கல்வி கற்று முடித்து விட்டு பாதுகாப்பாக வீட்டுக்கு செல்ல முடியும். இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கிய 1,537 பாடசாலை பஸ் சேவைகள் தற்போது இயங்கி வருகின்றன.

நாளொன்றுக்கு சுமார் ஒரு இலட்சம் மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுகின்றன. இந்த நிலையில், 2024 ஆம் ஆண்டில் 500 புதிய பஸ் சேவைகளை ஆரம்பிக்க தேவையான 202 மில்லியன் ரூபாயை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதியில் இருந்து ஒதுக்குவதற்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

(அ)

## மாணிக்கவாசகர் குருபூசையும் சொற்பொழிவும்!

யாழ்ப்பாணம், ஜூலை 12

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்த குருக்கள் நடத்தும் மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசையும் சிறப்பு சொற்பொழிவும் 3, 4ஆம் தொடர்கள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

சிறுப்பிட்டி மேற்கு நாகதம்பிரான் ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மூத்த விரிவுரையாளர் கலாநிதி ப.ா. தனபாலன் கலந்து கொள்வார்.

"மாணிக்கவாசகர் சுவாமிகளின் வாக்கும் வாழ்வும்" என்னும் விடயப்பொருளில் இளம் சைவப்புலவர் க. கயிலைவாசன் சொற்பொழிவாற்றுவார்.

இதேநேரத்தில், நவாலி தெற்கு நாகராஜா இராஜேஸ்வரி அம்பாள் ஆலய பிரதான மண்டபத்தில் சைவப்புலவர் செ. த. குமரன் "மாணிக்க வாசகர் சுவாமிகளின் அன்பு" என்னும் விடயப் பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

இரு நிகழ்வுகளிலும் மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசையும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஐ)

## முன்னாள் அமைச்சர் டயானாவுக்கு எதிராக மற்றொரு வழக்கு தாக்கல்!

கொழும்பு, ஜூலை 12

குடிவரவு - குடியகல்வு சட்டத்தை பயன்படுத்தி போலி தகவல்களை சமர்ப்பித்து வெளிநாட்டு கடவுச்சீட்டை பெற்ற முன்னாள் அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிராக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் நேற்று வியாழக்கிழமை இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதம நீதிவான் விடுமுறையில் சென்றமையால் குற்றப்பத்திரிகை வாசிப்பு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதேவேளை குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள நபரின் இராஜதந்திர கடவுச்சீட்டை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## 12 எரிபொருள் விநியோக ரயில் சேவைகள் நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 12

இரண்டாவது நாளாகவும் நேற்று முன்னெடுக்கப்பட்ட ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்களின் வேலை நிறுத்தத்தால் கொலன்னாவை மற்றும் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு இடையிலான எரிபொருள் விநியோக 12 ரயில் சேவைகள் இயக்கப்படவில்லை. இதனால் புகையிரதத் திணைக்களத்துக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாக திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, தினமும் 10 ஆயிரம் லீற்றர் கொள்ளவு கொண்ட 10 எரிபொருள் கொள்கலன்கள் ரயிலில் பொருத்தப்பட்டு விமான நிலையத்துக்கு தினமும் எரிபொருளை வழங்குவதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். பழைய சிக்கல்கள் தீரும். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆறுதல் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். புதிய சலுகைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**கடகம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**கன்னி**
எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்கு உள்ளாவீர்கள். பிள்ளைகளிடம் எதிர்மறையாக பேசாதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும்.

**துலாம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**விருட்சிகம்**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள். மதிப்புக் கூடும்.

**தனுசு**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். அலுவலகத்தில் மரியாதை கூடும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமையும் வீண் அலைச்சலும் இருக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். பொறுமைத் தேவைப.

**கும்பம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தாயார் ஆதரவாக பேசுவார். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும்.

**மீனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

# சிதம்பரம் நடராஜர் கோவிலில் நேற்று கனகசபைமீது ஏறி பக்தர்கள் தரிசனம்

கடலூர், ஜூலை 12

சிதம்பரம் நடராஜர் கோவிலில் கனகசபை மீது ஏறி பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

சிதம்பரம் நடராஜர் கோவில் ஆனித்திருமஞ்சன தரிசன உற்சவம் கடந்த 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. நேற்று தேர்த் திருவிழாவும், இன்று அதிகாலை மகா அபிஷேகமும், பிற்பகல் ஆனித்திருமஞ்சன தரிசன உற்சவமும் நடைபெறுகிறது. (எ)



# ரவுடிகள் ஒழிப்பு நடவடிக்கை ஆரம்பம்

சென்னை, ஜூலை 12

தினமும் இரு வேளை பொலிஸ் வாகனத்தில் சமிக்ஞை விளக்குகளை ஒளிர விட்டவாறு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ரோந்துப் பணியில் ஈடுபட வேண்டும் என்று சென்னையின் புதிய பொலிஸ் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த 5 ஆம் திகதி மர்மக் கும்பலால் பட்டப் பகலில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். உணவு விநியோக ஊழியர்கள் போன்று உடை அணிந்து வந்த கும்பல் சரமாரியாக வெட்டிப் கொலை செய்து விட்டு தப்பியது.

இந்தச் சம்பவம் சென்னை மட்டும் அல்லாமல் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. சட்டம் - ஒழுங்கு, கட்டுக்குள் இல்லை, ரவுடிகள் மற்றும் கூலிப்படையினரின் ஆதிக்கம் அதிகளவில் உள்ளதாக குற்றச்சாட்டு எழுந்தது. மேலும், பொலிஸ் துறை மீது நம்பிக்கையை இழந்துவிட்டதாக பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் வேதனை வெளியிட்டனர்.

இந்த நிலையிலேயே பொலிஸ் ஆணையர் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார். (எ)

# "அ. தி. மு. க. தலைமையில் வலுவான கூட்டணி வரும்"



சென்னை, ஜூலை 12

தமிழகத்தில் 2026 இல் நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலில் அ. தி. மு. க. தலைமையில் வலுவான கூட்டணி அமையும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம், சிறீபெரும்புதூர் ஆகிய தொகுதி நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் ஆகியோருடன் பழனிச்சாமி ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தின்போது, பாராளுமன்றத் தேர்தலில் அ. தி. மு. க. பெற்ற வாக்குகள் குறைவானது ஏன்? எந்தெந்த நிர்வாகிகள் தேர்தலில் சரியாக வேலை செய்யவில்லை? தி. மு. கவினருடன் கைகோர்த்து, தேர்தலில் அ. தி. மு. கவுக்கு எதிராக வேலை பார்த்தது யார்? என்பது உள்ளிட்ட கேள்விகளை பழனிச்சாமி எழுப்பியதாக கூறப்படுகிறது. இதேவேளை, வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் அ. தி. மு. க. தலைமையில் வலுவான கூட்டணி அமையும். அப்பணியை கட்சி தலைமை பார்த்துக் கொள்ளும். அது குறித்து நிர்வாகிகள் யாரும் கவலைப்பட வேண்டாம்- என்றார் பழனிச்சாமி. (எ)

# 82. 48 சதவீத வாக்கு பதிவு

விழுப்புரம், ஜூலை 12

விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் நேற்று முன்தினம் அமைதியாக நடந்தது. இதில் 82. 48 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (எ)

# விநாயகர் கோவிலை காணவில்லை!

சென்னை, ஜூலை 12

சென்னை என். எஸ். சி. போஸ் வீதியில் இருந்த விநாயகர் கோவிலை காணவில்லை என தொடரப்பட்ட வழக்கில், அதே இடத்தில் புதிதாக கோவில் கட்டித்தரப்படும் என அறநிலையத் துறை தரப்பில் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் நான்கு கொலைகள்

# "ஸ்டாலின் குடும்பத்தை தவிர யாருக்கும் பாதுகாப்பு இல்லை"

சென்னை, ஜூலை 12

தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் குடும்பத்தைத் தவிர மற்ற யாருக்கும் தமிழகத்தில் பாதுகாப்பு இல்லை என்று அ. ம. மு. க. பொதுச் செயலாளர் ரி. ரி. வி தினகரன் தெரிவித்தார்.

கும்பகோணத்தில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தொண்டர்கள் அனைவரும்



ஒன்றிணைய வேண்டும். அது தான் அ. தி. மு. க. என்ற இயக்கத்துக்கு சிறப்பானத ாகும். தமிழகத்தில் தற்போது முதல்வரின் குடும்பத்தைத் தவிர மற்ற யாருக்கும் தி. மு. க. ஆட்சியில் பாதுகாப் பில்லை. இங்கு தினந்தோறும் 4 கொலைகள் நடந்தேறி வருகின்றன. இந்தக் கொலைகளை செய்வது 20 வயதுக்குட்பட்ட இளைஞர்களாக உள்ளனர்- என்றார். (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டியில்லாக் கடன் விடயத்தில் மாணவரை பலிக்கடா ஆக்காதீர்!

## சஜித் பிரேமதாச சபையில் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 12

**வட்டியில்லா கல்விக் கடன் திட்டத்திற்கு இலங்கை வங்கி இன்னும் ஒப்புதல் வழங்கவில்லை. இது குறித்து கல்வி அமைச்சர் தெரிவித்தும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை களை எடுக்கவில்லை. இந்த கடன் திட்டத்தில் கடன் பெற்ற 200 மாணவர்கள், குறித்த கடன் தொகைகளை திருப்பி செலுத்துவதில் குளறுபடி ஏற்படுத்தியுள்ளதாக கூறி, 8 ஆவது தொகுதியினருக்கு வட்டியில்லா கடன் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் கல்வி அமைச்சர் மீண்டும் தலையிட்டு தீர்வை பெற்றுக்கொடுக்குமாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளு மன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.**



உயர்கல்வியில் ஆர்வமுள்ள இளைஞர்கள் தங்கள் சொந்த ஆற்றலாலும், சுயமுயற்சியா லும் சமூகத்தில் நல்ல வருமா னத்தை ஈட்டிக்கொள்ள பாடுப டும் இளைஞர்களுக்கு வழங்கப் படும் இந்த வட்டியில்லா கடன் திட்டத்தை தன்னிச்சையாக நிறுத்தி வைப்பது இந்நாட்டு இளைஞர்களுக்கு இழைக்கப்ப டும் கடும் அநீதியாகும். கல்வியமைச்சர் இவ்விடயத்தில் முற்போக்கானவர். அவர் அறி வுறுத்தல்களை பிறப்பித்தும் அதிகாரிகள் அமைச்சரின் உத்த ரவைப் பின்பற்றாமல் அவர்கள் விரும்பியவாறு செயற்பட்டு வருவது கவலைக்கிடமான விடயம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பழைய மாணவர்கள் செய்த தவறுக்கு புதிய மாணவர்களை பலியாக்க வேண்டாம். இது தொடர்பில் உடனடியாக தலையிட்டு மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியை நிறுத்த நடவடிக்கை எடுக்கு மாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கல்வி அமைச் சரிடம் கோரிக்கை விடுத்தார். (அ)

# பணிப் புறக்கணிப்பில் ஈடுபடாத அரச ஊழியருக்கு சம்பள உயர்வா?

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 12

கடந்த 8ஆம் திகதி மற்றும் 9ஆம் திகதிகளில் கடமைகளில் ஈடுபட்டிருந்த அரச உத்தியோ கத்தர்களுக்கு சம்பளத்தை அதி கரிக்கவுள்ள அரசாங்கம் அறிவித் துள்ள நிலையில் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று பதிவு செய் யப்பட்டுள்ளது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குழுவொன்று இவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய் துள்ளது.

ஒன்றிணைந்த பணிப்புறக்க ணிப்பில் கலந்துகொள்ளாத பணியாளர்களுக்கு விசேட சம் பள அதிகரிப்பை வழங்கி அரச உத்தியோகத்தர்களுக்கு இடை யில் பிளவுகளை ஏற்படுத்த முயற் சிப்பதாக குற்றம் சுமத்தப்பட் டுள்ளது.

அரச சேவையின் நிறைவேற்று அதிகாரிகளுக்கு வழங்க தீர்மா னிக்கப்பட்டுள்ள 25,000 ரூபா கொடுப்பனவை தமக்கு வழங் குமாறு கோரி அரச ஊழியர்கள் கடந்த இரண்டு நாட்களாக பணிப்புறக்கணிப்புப் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 8ஆம் திகதி மற்றும் 9ஆம் திக திகளில் வேலை நிறுத்தத்தில் பங்கேற்காத அரச ஊழியர்க ளுக்கு விசேட சம்பள அதிக ரிப்பை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# வீட்டு வாடகைக்கு புதிய சட்டம்

கொழும்பு, ஜூலை 12

குத்தகைதாரர், வீட்டுவசதி சட்டத்தை திருத்தும் புதிய சட்டமூல முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதியளித் துள்ளது.

இதன்படி, 1972 ஆம் ஆண் டின் 7 ஆம் இலக்க வீட்டு வாட கைச் சட்டம் நீக்கப்பட்டு அதன் பின்னர் புதிய சட்டம் கொண்டு வரப்படும்.

குத்தகைதாரர் மற்றும் நில உரிமையாளரின் உரிமைகளை சமமாக பாதுகாக்கும் நோக்கத் தில்இந்த சட்ட மூலத்தை கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது.

# இந்தியா,பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு கால்நடைகள்!

கொழும்பு, ஜூலை 12

இலங்கையின் பசும்பால் உற்பத்தித் தொழிலை மேம்ப டுத்துவதற்காக பசுக்களை வழங் குவதற்கு இந்தியாவும் பாகிஸ் தானும் இராஜதந்திர மட்டத் தில் இணக்கம் தெரிவித்துள்ளன.

இலங்கையில் பசும்பால் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் அதிகளவான பாலைப் பெறக்கூடிய பசுக்கள் இல்லா தது இலங்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித் துள்ளது.

இலங்கையில் ஒரு பசுவிட மிருந்து இருந்து பெறப்படும் பாலின் அளவு ஒரு நாளைக்கு சுமார் 10 லீற்றர் ஆகும். ஆனால் புதிய விவசாய தொழில்நுட்பத் தின் மூலம் ஒரு பசுவிடமிருந்து ஒரு நாளைக்கு மூன்று வேளை 60 லீற்றர் வரை பால் பெற முடி யும் என்று அமைச்சு கூறுகிறது.

இந்தியா மற்றும் பாகிஸ்தா னுடனான பேச்சுவார்த்தையின் படி இந்திய அரசு, சாஹிவால் என்ற வகை பசு மாடுகளையும், பாகிஸ்தான் முரா என்ற வகை எருமை மாடுகளையும் இலங் கைக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளன.

இலங்கையின் காலநிலைக்கு ஏற்ற பசுக்கள் மற்றும் எருமை கள் இந்தியாவிலும் பாகிஸ்தா னிலும் மட்டுமே காணப்படு கின்றதுடன் சில ஆண்டுகளுக்கு முன்பு, நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் இருந்து பசுக்கள் இறக்குமதி செய்யப் பட்டாலும், அந்த திட்டங்கள் தோல்வியடைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ)

# 527 கோடி ரூபாய் செலவில் கட்டிய மேம்பாலத்தைத் திறந்தார் ரணில்

கொழும்பு, ஜூலை 12

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சி னால் 5 ஆயிரத்து 278 மில்லி யன் ரூபா செலவில் நிர்மாணிக் கப்பட்ட-கொம்பனி வீதிக்கும், நீதிபதி அக்பர் மாவத்தையி லுள்ள ரயில் பாதைக்கு இடை யில் மேம்பாலத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று திறந்து வைத்தார்.

நாளாந்தம் 109 ரயில் சேவை கள் இந்த பாதையின் ஊடக மேற்கொள்ளப்படுகின்றன. இந்த சேவைகளின் போது 109 முறை ரயில் கடவைகள் மூடப் படுகின்றன. இதனால் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக் கியிருந்தனர்.

எனவே இந்த போக்குவ ரத்து நெரிசலை தவிர்க்கும் நோக்கில் வீதி அபிவிருத்தி அதி



கார சபையினால் இந்த புதிய திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி இந்த மேம்பாலத் திட்டம் நிறைவடைந்ததன் மூலம் கொம்பனி வீதியிலிருந்து கல்லுப்பிட்டியை நோக்கியும் ஜனாதிபதி செயலகம் நோக்கி யும் போக்குவரத்து நெரிசலின்றி பயணிக்க முடியும்.

நிகழ்வில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகு ஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன, ஜனாதிபதியின் பணிப்பாளர் பிரதானி மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர் பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சின் செயலா ளர் ரஞ்சித் ரூபசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# சுற்றுலா பயணிகள் வருகை கடந்த மாதம் முதல் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 12

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண் ணிக்கையில் கடந்த மாதத்திலி ருந்து குறிப்பிடத்தக்களவு அதி கரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுற் றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ஜூலை முதல் வாரத்தில் 43,000 இற்கும் மேற் பட்ட சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது.

அதன்படி சுற்றுலா அபிவி ருத்தி அதிகாரசபையின் தற்கா லிகத் தரவுகளின்படி வருடாந் தம் 1,053,332 சுற்றுலா பயணி கள் நாட்டுக்கு வருகை தருவ தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டு ஜூன் முதல் வாரத்துடன் ஒப்பிடுகை யில், ஜூலை முதல் வாரத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 89 வீதம் அதிகரித்துள்ளது. (அ)

# பஸ் விபத்தில் 37 பேர் காயம்!

கொழும்பு, ஜூலை 12

நுவரெலியாவில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற அதி சொகுசு தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகி யுள்ளது.

குறித்த விபத்து நேற்று அதி காலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. பஸ்ஸில் பய ணித்த 37 பேரும் காயமடைந் துள்ளனர்.

விபத்து காரணமாக நுவரெ லியா கண்டி பிரதான வீதியில் போக்குவரத்து முற்றாக பாதிக் கப்பட்டது.

இதன்போது, பஸ்ஸில் பய ணித்த 42 பயணித்தாகவும் தெரி விக்கப்பட்டது.

இதனையடுத்து விபத்து தொடர்பான மேலதிக விசார ணைகளை நுவரெலியா பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# "ஒழுக்கம் இல்லாத நாடு முன்னேற்றம் அடையாது"

கொழும்பு, ஜூலை 12

ஒழுக்கம் இல்லாத நாடு ஒரு போதும் முன்னேற்றம் அடைய முடியாதென நீதி மற்றும் சிறைச் சாலை விவகார அமைச்சர் விஜ யதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

காலி கரந்தெனிய ஸ்ரீஅபய திஸ்ஸ பிரிவெனாவில் இடம் பெற்ற அமரபுர மகா நிக்காய - ஆரியவன்ச சத்தம்ம பீடத் தின் 44ஆவது உபசம்பதா நிகழ் வில் கலந்து கொண்டு உரையாற் றியபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஒழுக்கம் இல்லாவிட்டால் சாசனம் அழிந்துவிடும் என்பதை போன்று ஒழுக்கம் இல்லாத நாடும் வீழ்ச்சியை நோக்கி பய ணிக்கும் என்று குறிப்பிட்டார்.

புத்த தர்மத்தின் முன்னுதார ணம் நாட்டின் முன்னேற்றத் துக்கு மிக அவசியமானதாக காணப்படுகிறது.

இலங்கையில் உபசம்பதா இல்லாத காலத்தில், தாய்லாந் தில் இருந்து அதனை கொண்டு வருவதற்காக எமது பிக்குகள் மூன்று தடவை தாய்லாந்து செல்ல வேண்டியிருந்தது.

பல இன்னல்களுக்கு மத்தி யில் பாதுகாத்து முன்னெடுத் துச் செல்லப்பட்டிருந்த இந்த உபசம்பதா முறைமையை பாது காக்க மகா சங்கத்தினர் மிகலும் பாடுபட்டிருந்தனர்.-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன உதவித் திட்டங்கள் மீனவரின் மனநிலை அறியாது முன்னெடுப்பு

## சுழிபுரம் கடற்றொழிலாளர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 12

**சீனாவின் உதவி திட்டங்கள் கடற்றொழிலாளர்களின் மனநிலை அறியாது முன்னெடுக்கபடுகின்றதாகவும் மக்களுக்கு ஏற்ற திட்டங்களை கருத்தறிந்து முன்னெடுக்குமாறும் சுழிபுரம் திருவடிநிலை கெங்காதேவி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் செல்லன் தெய்வேந்திரம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

திருவடிநிலை பகுதியில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீன தேசத்திலிருந்து உதவி திட்டங்கள் வருவதாக அறியக் கூடியதாக இருக்கின்றது. அதிலும் சீனப் பொருத்து வீட்டுத் திட்டம் தொடர்பில் தற்பொழுது வடக்கு-கிழக்கில் பெரிதும் பேசப்படுகிறது.

கடற்கரைக் காற்று, உவர் நீருக்கு வெகுவாக அழிவடையும் இந்த வீட்டுத் திட்டத்தை பெரும்பாலும் எமது பிரதேச சத்தவர்கள், தொழிலாளர்கள் முற்று முழுதாக நிராகரித்துள்ளார்கள்.

ஆகவே இந்த கரையோரத்துக்கு ஏற்ற திட்டங்களையே நடைமுறைப்படுத்த வேண்டும் என நாங்கள் கோருகின்றோம்.

சீன தேசத்தின் உணவுத் திட்டம் தொடர்பிலும் தற்பொழுது பேசப்படுகிறது. இலங்கையிலே வடக்கு-கிழக்கில் உற்பத்தி செய்யப்படுகின்ற சுதேச அரிசி வகைகளைத்தான் நாங்கள் இவ்வளவு காலமும் உண்டு வருகின்றோம்.

ஆகவே இங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற அரிசியை கொள்வனவு செய்து வழங்குவதன் மூலம் இரு தரப்பு நன்மை கிடைக்கப் பெறுகின்றது. மீனவர்களும் நன்மை அடைவதோடு மேலும் விவசாயிகளும் நன்மை அடையலாம்.

சீன தேசத்தின் உதவிகளை வரவேற்கின்றோம். ஆனால் முறையாக மக்களின் கருத்தறிந்து இந்த திட்டங்கள் நடைபெறவேண்டும்-என்றார். (அ)

# தன்னைத் தானே சுட்டு உயிர் மாய்த்த சார்ஜன்ட்!

கொழும்பு, ஜூலை 12

அநுராதபுரத்தில் பொலிஸ் சார்ஜென்ட் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் - ருவன்வெலி மஹா சாயவில் உள்ள பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே நேற்று முன் தினம் இரவு அவரின் சேவைக்காக வழங்கப்பட்ட துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவர் 55 வயதுடைய பொலிஸ் சார்ஜன்ட் எனத் தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பொருட்களின் விலைகள் மீண்டும் உயர வாய்ப்பு!

கொழும்பு, ஜூலை 12

பொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கும் சாத்தியங்கள் இருப்பதாகச் சுங்கத் திணைக்களத்தின் விடுவிப்பு அலுவலர்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

அண்மையில் சுங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த பணியாளர்கள் சுகவீனப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதனால் துறைமுகங்களில் தேங்கிக்கிடந்த பொருட்களை மேற்பார்வை செய்து விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

அதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் சாத்தியங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மது அருந்துபவர்களை மகிழ்விக்க வேண்டும்!

## இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத்

கொழும்பு, ஜூலை 12

மனைவியுடனான பிரச்னையால் பலர் மதுபானங்களை அருந்தி மன ஆறுதல் தேடுவதனால் மதுபானங்களின் விலைகளை குறைத்து மது அருந்துபவர்களை மகிழ்விக்கவேண்டும் என கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மது வரி கட்டளைச் சட்டம் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டங்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில்-

மதுபானங்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் நான் தொடர்ந்து சபையில் உரையாற்றியுள்ளேன்.

மதுபானங்களின் விலை அதிகரிப்பால் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி தீவிரமடைந்துள்ளன. மதுவரி சட்டங்களை திருத்துவதாலும், புதிதாக சாலைகளுக்கு அனுமதி வழங்குவதாலும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது.

மதுபானங்களின் விலை அதிகரிப்பால் மதுவரித் திணைக்களம் இந்த ஆண்டு முதல் காலாண்டில் மாத்திரம் 50 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளது.

மொத்த சனத்தொகையில் 60 இலட்சமானோர் மது அருந்துகிறார்கள். உடல் வலி, மன வேதனை மற்றும் மனைவியுடனான பிரச்சினை ஆகிய காரணிகளால் இவர்கள் மது அருந்தி மன ஆறுதலடைகின்றனர்.

குறைந்த விலையில் இருந்த அதிவிசேட மதுபான போத்தலின் விலை அதிகரிக்கப்பட்டதால் சமூக கட்டமைப்பில் பாரிய பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன.

மதுபான நுகர்வுக்கான கேள்வி குறைவடைந்துள்ளதால் சட்டவிரோத மதுபான உற்பத்தி அதிகரித்துள்ளன. இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 50 பேர் உயிரிழந்துள்ளார்கள். விலை அதிகரிப்பால் கடலில் மிதந்து வந்த திரவத்தை அருந்தி ஐந்து மீனவர்கள் உயிரிழந்துள்ளார்கள். ஆகவே மதுபான விலைகளை குறைத்து மதுபானங்களை அருந்துபவர்களை மகிழ்விக்க வேண்டும்.


ஆகவே மதுபானங்களின் விலைகளை குறைக்குமாறு அரசை வலியுறுத்துகிறேன்-என்றார். (அ)

# இலங்கைக்கு இந்தியா வழங்கிவரும் காத்திரமான உதவிகளுக்கு பாராட்டு

## இந்திய தூதுவர்-மக்கள் காங்கிரஸ் தலைவர் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் ஆராய்வு

கொழும்பு, ஜூலை 12

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் பரஸ்பர ஒத்துழைப்புக்கான வாய்ப்புக்களை ஆராய்வது தொடர்பில், மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கு இடையில் இந்திய தூதரகத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.



இந்தக் கலந்துரையாடலின் போது, கடினமான காலங்களில் இந்தியா இலங்கைக்கு செய்த உதவிகளுக்காக மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் தமது நன்றிகளை வெளிப்படுத்தினார்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அமைத்துக்கொடுத்த 50,000 வீடுகள் மற்றும் மலையகத்துக்கு வழங்கிய 10,000 வீடுகள் தொடர்பிலும் இங்கு பிரஸ்தாபித்த தலைவர் ரிஷாத், இதுவரை எந்தவொரு நாடும் இவ்வாறான உதவிகளை செய்திருக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், அயல்நாடான இந்தியா தொடர்ந்தும் இலங்கைக்கு உதவ வேண்டியதன் அவசியம் குறித்தும் தெளிவுபடுத்திய அவர், நெருக்கடியான காலங்களின் போது இலங்கைக்கு வழங்கிய மனிதாபிமான உதவிகள் போன்று, இனியும் உதவ வேண்டியதன் கடப்பாட்டையும் எடுத்துரைத்தார்.

அதேபோன்று, வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக இரண்டு நாடுகளின் மீனவர்களுக்கு இடையில் ஏற்பட்டு வரும் சர்ச்சைகள் குறித்தும் சுட்டிக்காட்டிய அவர், இலங்கை கடல்வளத்தை இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகுகள் வகைதொகையின்றி அள்ளிச் செல்வதன் பாதிப்புகள் குறித்தும் தமது கவலையை வெளியிட்டார். எதிர்காலத்தில் இந்தப் பிரச்னையை முடிவுக்குக்கொண்டுவர எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பிலும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, இலங்கையின் அனைத்து மாவட்டப் பாடசாலைகளின் மேம்பாட்டுக்காகவும் இந்தியா பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. இற்றைவரை 200 மில்லியன் டொலர் வரையிலான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமைய சுட்டிக்காட்டிய தலைவர் ரிஷாட், இது தொடர்பில், தமது கட்சியின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக்கொண்டார். (அ)

# புகைப்பிடித்தலால் ஒருநாளில் 50 முதல் 60 மரணங்கள் பதிவு!

கொழும்பு, ஜூலை 12

நாட்டில் புகைப்பிடித்தலினால் நாளொன்றுக்கு 50 முதல் 60 மரணங்கள் பதிவாகுவதாக மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரத்தில் உள்ள சர்வோதய நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போதே மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் மையத்தினால் இந்த தரவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் நாளொன்றுக்கு 16 இலட்சம் பேர் புகைப்பிடிப்பதோடு, அதற்காக நாளொன்றுக்கு 50 கோடி ரூபாவுக்கும் அதிகமாக செலவழிக்கின்றனர்.

புகைப்பழக்கம் காரணமாக அதிகளவான மக்கள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மக்கள் மத்தியில் புகைப்பழக்கம் 9 வீதமாக குறைவடைந்துள்ளதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுத்துறை மாவட்டத்திலிருந்தே அடுத்த ஜனாதிபதி தெரிவாவார்!

## கூறுகிறார் குமார வெல்கம



கொழும்பு, ஜூலை 12

**திருடர்களை ஒன்றிணைத்துக்கொண்டு நாட்டை நிர்வகிக்க முடியாது. அதனால் திருடர்களை ஒழிக்க முடியுமான, பாராளுமன்றத்துடன் தொடர்புடைய ஒருவரை களுத்துறை மாவட்டத்தில் இருந்து அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம். களுத்துறை மாவட்டத்தில் இருந்தே அடுத்த ஜனாதிபதி தெரிவாவார் என எதிர்க்கடசி உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மதுவரி கட்டளைச் சட்டத்தின் அறிவித்தல்கள் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு வீழ்ச்சியடைந்தபோது நாட்டை பொறுப்பேற்று, மக்கள் வரிசை நிலையில் இருப்பதை முடிவுக்கு கொண்டுவந்தமையையிட்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஆனால் அவர் பொருளாதாரம் தொடர்பாக எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பில் எனக்கு தெரியாது. அதனால் அது தொடர்பில் நான் ஒன்றும் தெரிவிக்கமாட்டேன் என்றாலும் ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரத்தை சரியான முறையில் முன்னெடுத்தாலும் அவர் தவறானவர்களை தன்னுடன் வைத்திருந்தால், மக்கள் ஒருபோதும் வாக்களிக்கப்போவதில்லை.

நான் ஏன் இவ்வாறு சொல்வதென்றால், கடந்த 7ஆம் திகதி களுத்துறையில் கூட்டம் ஒன்றை நடத்தினார்கள். ஜூலை 7 என்பது மிகவும் பயங்கரமான தினமாகும்.

அந்த கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டிருந்தார். மகிந்த ராஜபக்ஷவும் இருந்தார். மகிந்த ராஜபக்ஷ தொடர்பில் எனக்கு தனிப்பட்ட மதிப்பு இருக்கிறது. அவர் இல்லை என்றிருந்தால் யுத்தம் நிறைவடைந்திருக்காது. அவர் உறுதியான தீர்மானங்களை அன்று எடுத்தார். ஆனால் இந்த நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைய காரணமான 3 ராஜபக்ஷவினரும் அந்த கூட்டத்தில் இருந்தார்கள்.

கோட்டாபயவை ஜனாதிபதி வேட்பாளராக்க வேண்டாம் என நான் அன்று தெரிவித்தேன். ஆனால் அவர்கள் அதனை வழங்கினார்கள். இறுதியில் கலவரம் ஒன்று ஏற்படும்போது, அதற்கு முகம்கொடுக்க முடியாமல் அவர் தப்பி ஓடினார்.

அவரும் அந்த கூட்டத்தில் இருந்தார். அதேபோன்று இங்கிலாந்து வைத்தியசாலையில் இருந்த குப்பைகளை எமது நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்தவரும் இருந்தார். நல்லவர்களும் இருந்தார்கள். ஆனால் ஜனாதிபதி உரையாற்ற ஆரம்பிக்கும்போது தங்கத்தின் அனுமதி என குறிப்பிட்டார்.

இந்த வார்த்தைக்கு சமூகவலைத்தளத்தில் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. ஏனெனில் தங்க மாலை திருடிய பலர் களுத்துறையில் இருந்தார்கள். ரோஹித்த அவ்வாறானவர் அல்லர்.

ஆனால் அவருக்கும் இந்த குற்றச்சாட்டை இந்த சபையில் பலரும் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு அவர் பதிலும் வழங்கி இருக்கிறார். ஆனால் அந்த மேடையில் திருடர்கள் இருந்தார்கள். இவர்களை வைத்துக்கொண்டா ரணில் விக்கிரமசிங்க நாட்டை நிர்வகிக்கப்போகிறார் என கேட்கிறேன்-என்றார்.



# யாழ்ப்பாணத்தில் மாதிரி மரக்கறி செய்கை வெற்றி

## 90 வீதம் நீரை மீதப்படுத்தும் புதிய முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை

90 வீதம் நீரை மீதப்படுத்தும் மாதிரி சொட்டுநீர்பாசன முறையிலான மரக்கறிச் செய்கை வெற்றி பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் சமுதாயம் சார் மேம்பாட்டுக் குழுவினால் இந்த பரீட்சார்த்த பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இதுவரை காலமும் இறைப்பு முறை மூலம் நீர்பாசனம் மேற்கொள்ளப்பட்டு மரக்கறிப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

சொட்டு நீர்ப்பாசன முறை மூலம் மரக்கறிச் செய்கை மேற்கொள்வது தொடர்பில் கிளிநொச்சி திருவையாறு பகுதியில் இவ்வாறு பரீட்சாத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த முறை மூலம் மரக்கறி செய்கைக்கு பயன்படுத்தப்படும் நீரை 90 வீதம் வரை மீதப்படுத்தலாம் எனவும், தேவையான பசளையை கரைசலாக நீருடன் சேர்த்து நீர் பாய்ச்சுவதனாலும், புற்கள் வளர்வதை தடுப்பதனாலும் செலவும் மீதப்படுத்தப்படுவதாக யாழ் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் அரசகேசரி தெரிவித்தார்.

குறைந்த செலவில் அதிக உற்பத்தியை பெற முடியும் எனவும், மிக முக்கியமாக நீர் விரயமாவதையும், நீர் பாய்ச்சலுக்காக செலவிடும் நேரத்தையும் குறைக்கலாம் எனவும் அவர் கூறினார்.

பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களை விவசாய திணைக்களத்தினரும் சென்று பார்வையிட்டுள்ளனர். (அ)

# ரணிலின் முயற்சி வெற்றி பெறாது!

## அனுரகுமார கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 11

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ளதாக கூறப்படும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றியடையாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்று வருகிறது. இந்த விவாதத்தில் தொடர்ந்து உரையாற்றிய அனுரகுமார திசாநாயக்க,

ஜனாதிபதி மற்றும் அவரது ஆதரவாளர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டாலும், ஜனாதிபதித் தேர்தல் குறித்த காலப்பகுதியில் நடத்தப்படும்.

ரணில் விக்கிரமசிங்க அரசியல் விளையாட்டுகளை விளையாடுவதற்கு சாதுரியமானவராக அறியப்பட்டவர். கடந்த 30 ஆண்டுகளாக தனது அரசியல் வாழ்க்கையில் இதைத்தான் செய்து வருகிறார். எனினும், அவரது அரசியல் விளையாட்டுகள் அவரது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மாத்திரமே பலனளிக்கிறன.

அவரது அரசியல் விளையாட்டுக்களால் இறுதியில் ஐக்கிய தேசியக் கட்சியால் பாராளுமன்றத்தில் ஓர் ஆசனங்களைப் பெற முடியாமல் போனது.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வாறான அரசியல் விளையாட்டுக்களை விளையாடுவதில் மூளையாக செயற்படுபவர்.

மகிந்த ராஜபக்ச பல அரசியல் கட்சிகளை அழித்துள்ளதுடன், பல கட்சிகளுடன் கைக்கோர்த்துள்ளார். தன்னைக் கொலை செய்ய சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் நட்பாக பழகும் திறனுடையவர். அவர் ரணில் விக்கிரமசிங்கவை விடவும் பெரிய விளையாட்டு வீரர்-என்றார்.

# அதானி காற்றாலை மின் உற்பத்தி திட்டம்: சமரசம் செய்ய முடியாது என்கின்றது அரசு

கொழும்பு, ஜூலை 12

வடக்கில் அதானி பசுமை ஆற்றல் திட்டம் தொடர்பில் சுற்றுச்சூழல் கவலைகள் குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டபோதிலும், திட்டத்தை சமரசம் செய்ய முடியாது என மின் மற்றும் எரிசக்தி அமைச்சின் உயர்மட்ட வட்டாரம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் சேதத்தைத் தணிப்பதற்கான நடவடிக்கைகளை மாத்திரமே எடுக்க முடியும் என்றும் அமைச்சரின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மன்னார் மற்றும் பூநகரி மாவட்டங்களில் அதானி காற்றாலை மின் திட்டம் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் 'வெளிப்படைத்தன்மை இல்லாமை' ஆகியவற்றின் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத் தப்பட்டுள்ளது.

சுமார் 150 இனங்களைச் சேர்ந்த ஒரு மில்லியன் பறவைகள் இடம்பெயர்ந்து மன்னாருக்கு வரும், மத்திய ஆசிய விமானப் பாதையின் குறுக்கே வரவிருக்கும் திட்டத்திற்கு இலங்கை நிலையான எரிசக்தி அதிகாரசபை சுற்றுச்சூழல் [illegible] இருப்பினும், இந்த காற்றாலை ஆற்றலுக்கான அதிக சாத்தியக்கூறுகளைக் கொண்ட இடம் என்றும், அதனால் எந்த விடயத்திலும் சமரசம் செய்ய முடியாது என்றும் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எவ்வாறாயினும், இடம்பெயர்ந்த பறவைகளின் பாதைகள், அவற்றின் வாழ்விடங்கள் மற்றும் இனப்பெருக்க முறைகள் ஆகியவற்றில் ஏற்படும் பாதிப்புகளைத் தணிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதானி கிரீன் எனர்ஜி லிமிடெட் மூலம் இலங்கையில் திட்டங்களை அமைப்பதில் இந்தியாவின் அதானி குழுமம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் முதலீடு செய்வதற்கு திட்டமிட்டுள்ளது.

இந்த திட்டங்களில் மன்னார் நகரம் மற்றும் பூநகரிப் பகுதிகளில் மொத்தமாக 484 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு காற்றாலைகள் அடங்குகின்றன. (அ)

# மேலும் 728 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 12

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது போதைப் பொருள் தொடர்பான குற்றங்கள் தொடர்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 718 ஆண்களும் 10 பெண்களும் காணப்படுவதாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 34 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் 81 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 147 கிராம் 507 மில்லிகிராம் ஹெரோயின், 246 கிராம் 261 மில்லிகிராம் ஐஸ், 29,709 கிராம் 06 மில்லிகிராம் கஞ்சா, 5,204 கஞ்சா செடிகள் மற்றும் 134 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் ஆயுதக்கிடங்கு!

## பெருமளவான வெடிபொருட்கள் மீட்பு





மட்டக்களப்பு, ஜூலை 12

**மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆயுதக்கிடங்கு அகழப்பட்டு, அதிலிருந்து பெருமளவான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் மீட்கப்பட்டன.**

கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைக்காடு பகுதியில் விசேட அதிரடிப் படையினர் அகழ்வுப் பணியில் ஈடுபட்டபோது 20 ஆயிரம் ரி - 56 ரக துப்பாக்கி ரவைகள், 300 கண்ணிவெடிகள், 38 வெடி மருந்துப் பொருட்கள் எடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட விசேட அதிரடிப் படையின் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஏ. ஏ. பி. சம்பத் குமாரவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த அகழ்வுப் பணி நடைபெற்றது.

வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் கே. ஜி. லக்மல் குமார, கல்லடி, களுவாஞ்சிக்குடி, வவுணதீவு ஆகிய பிரிவுகளின் விசேட அதிரடிப் படையினர் இணைந்து இந்த அகழ்வுப் பணியில் ஈடுபட்டனர்.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கு அமைய இந்த அகழ்வுப் பணி நடைபெற்றதுடன், எடுக்கப்பட்ட வெடிபொருட்களை கரடியனாறு பொலிஸார் பொறுப்பேற்று நீதிமன்றில் ஒப்படைக்கவுள்ளனர்.

(எ)



# பொத்துவில் பதில் பிரதேச செயலாளர் பதவியேற்றார்

பொத்துவில், ஜூலை 12

அம்பாறை, பொத்துவில் பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலாளராக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆஷிக் பதவியேற்றுக் கொண்டார்.

அம்பாறை அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரமவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் உள்ளிட்ட மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(எ)



# கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் கேட்போர் கூடத்துக்கு அடிக்கல் நாட்டல்

கல்முனை, ஜூலை 12

75 ஆம் ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் கல்வி அமைச்சின் ஆறு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் நிர்மாணிக்கப்படவுள்ள கேட்போர் கூடத்துக்கும், புதிய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்துக்குமான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அதிபர் எம். ஐ. ஜாபீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான எச். எம். எம். ஹரீஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கேட்போர் கூடத்துக்கு அடிக்கல் நாட்டி வைத்தார்.

(எ)

# மயிலத்தமடு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 12

மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 8 ஆம் திகதி மட்டக்களப்பு - செங்கலடி பகுதிக்கு ஜனாதிபதி வருகை தந்தபோது, கொம்மாந்துறை பகுதியில் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை பிரச்னைக்கு தீர்வு கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பண்ணையாளர்கள், சிவில் சமூகச் செயல்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 30 பேருக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிபதி மதுஜலா கேதீஸ்வரன் முன்னிலையில் நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின்போது, வழக்குடன் தொடர்புடைய அனைவரும் மன்றுக்கு சமுகமளிக்காமையால் அடுத்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை முன்னிலையாகுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, செய்தி சேகரிக்கச் சென்ற இரண்டு ஊடகவியலாளர்களுக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(எ)

# திருவிழாக் காலங்களில் விசேட பரிசோதனைகள்

திருக்கோவில், ஜூலை 12

திருவிழாக் காலங்களில் ஆலய வளாகத்தில் நடத்தப்படும் உணவுக் கடைகள் விசேட பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று திருக்கோவில் சிறீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய ஆடி அமாவாசை உற்சவம் தொடர்பான ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலய ஆடி உற்சவமானது எதிர்வரும் 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து அடுத்த மாதம் 4 ஆம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நலன்புரி சேவைகள் தொடர்பில் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள அனைத்து நிறுவனங்களினதும் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ். நிருபா, திருக்கோவில் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி எம். மோகனகாந்தன், ஆலய பரிபாலன சபைத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ், திருக்கோவில் பிரதேச சபை செயலாளர் திருமதி வீரபத்திரன், திருக்கோவில் கோட்டக் கல்விப் பணிபாளர் எஸ். ரவீந்திரன் மற்றும் திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலய நிர்வாக சபையினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(எ)

# கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை இன்று மாலை வரை திறந்திருக்கும்

அம்பாறை , ஜூலை 12

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழாவுக்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதையை மேலும் ஒரு நாள் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இன்று வெள்ளிக்கிழமையே காட்டுப்பாதை மூடப்படும் என்று அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் தெரிவித்தார்.

களுதாவளை - கதிர்காமம் பாதயாத்திரை ஒன்றியம் ஒரு நாள் காட்டுப் பாதைத் திறப்பை நீடிக்குமாறு விடுத்த கோரிக்கை, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம ஆகியோரின் பரிசீலனைக்கு பிற்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

[illegible] வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் இவ் வருட பாதயாத்திரைக்கான காட்டுப் பாதை மூடப்படவுள்ளது.

இம்முறை இதுவரை இப்பாதையால் 34 ஆயிரம் பக்தர்கள் பயணித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

உகந்தமலை முருகன் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கதிர்காமத்துக்கான கானகப் பாதை கடந்த 30 ஆம் திகதி திறக்கப்பட்டு கடந்த 12 தினங்கள் அடியார்கள் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

கதிர்காமம் மற்றும் உகந்தமலை முருகன் ஆலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் 06 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 22ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

(எ)

# முன்பள்ளி ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

அக்கரைப்பற்று, ஜூலை 12

கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் அக்கரைப்பற்றில் நிரந்தர நியமனம் கோரியும் சம்பள உயர்வு கோரியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தில் வடமாகாண சபையால் மாதாந்த கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. மத்திய அரசாங்கம் 5,000 ரூபாய் வழங்குகிறது. ஆனால், கிழக்கு மாகாண சபை 4, 000 ரூபாய் மட்டுமே வழங்குகின்றது. இன்றைய பொருளாதார நெருக்கடியில் இந்தக் கொடுப்பனவு ஒன்றுக்குமே போதாது. எனவே, முன்பள்ளி ஆசிரியர்களை ஓய்வூதியத்துடன் கூடிய நிரந்தர பதவியில் அமர்த்தி அதற்கான வேதனத்தையும் வழங்க வேண்டும் என்று முன்பள்ளி ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஜனாதிபதி, கல்வி அமைச்சர் மற்றும் ஆளுநருக்கான மகஜரை கிழக்கு மாகாண முன்பள்ளி வாரியத்திடம் வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸா நகரை விட்டு பலஸ்தீனர்கள் உடனடியாக வெளியேற வேண்டும்!

## இஸ்ரேல் இராணுவம் உத்தரவு

டெல் அவில், ஜூலை 12

**நான்கு நாட்களில் நான்கு பாடசாலைகள்மீது தாக்குதல் நடத்தி அடைக்கலம் தேடிய மக்களை கொன்று குவித்த இஸ்ரேல் இராணுவம், அனைத்து பலஸ்தீன மக்களையும் உடனடியாக காஸா நகரத்தை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளது.**

நேற்றுக்காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 52 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாகவும், 208 பேர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படும் நிலையில் இஸ்ரேல் இராணுவத்தின் இந்த அறிவிப்பு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கான் யூனிஸில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் பாடசாலை மீது இஸ்ரேல் படைகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டனர். காஸாவில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான மற்றொரு சுற்றுப் பேச்சுகள் நடைபெற்று வரும் நிலையில், புதன்கிழமை இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அத்தோடு கடந்த வருடம் ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் ஹமாஸ் போராளிகளில் 60 சதவீதத்தினர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், காஸாவில் கடந்த நான்கு நாட்களில் நான்கு பாடசாலைகள்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக காஸா நகரில் உள்ள பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரணம் மற்றும் பணி முகாமையின் தலைவர் பிலிப் லஸ்ஸாரினி கூறினார். அத்தோடு, உட னடியாக போர் நிறுத்தத்துக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

பாடசாலைகளில் அடைக்கலம் தேடும் மக்கள் கொல்லப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. மேலும், இந்தச் சம்பவம் குறித்து விரைவான விசாரணை தேவை என ஜேர்மனி தெரிவித்துள்ளது. (எ)

# உலகத்துக்கு யுத்தத்தை அல்ல புத்தரை கொடுத்தது இந்தியா!

## பிரதமர் மோடி பெருமிதம்



வியன்னா, ஜூலை 12


இந்தியா இந்த உலகத்துக்கு யுத்தத்தை அல்ல் புத்தரை கொடுத்துள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஆஸ்திரியா சென்ற மோடிக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அந்த நாட்டுப் பிரதமர் கார்ல் நெகம்மரை மோடி சந்தித்தார். தொடர்ந்து பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு நாட்டு தலைவர்களும் ஆலோசித்தனர்.

பின்னர் ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் இந்திய வம்சாவளியினரிடையே பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.

இதன்போது, இந்தியா மிகப் பெரிய இலக்குகளை எட்டி உயரிய மைல்கல்களைத் தொடுவதில் சிறப்பாக, பிரகாசமாக இயங்கி வருகிறது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நாங்கள் எங்களின் அறிவாற்றலையும், நிபுணத்துவத்தை பகிர்ந்து கொண்டு வருகிறோம். நாங்கள் இந்த உலகத்துக்கு யுத்தத்தை அல்ல புத்தரைக் கொடுத்துள்ளோம். அந்த வகையில் இந்தியா எப்போதும் அமைதியையும், வளத்தையும் இத்தேசத்துக்கு வழங்கியுள்ளது. அதனால், இந்தியா 21 ஆம் நூற்றாண்டில் தனது பங்களிப்பை வலுப்படுத்த உள்ளது- என்றார். (எ)

# "போர்க்களத்தில் நாம் தீர்வு காண முடியாது"



வியன்னா, ஜூலை 12

இது போருக்கான நேரம் அல்ல என்று நான் முன்பே கூறியுள்ளேன். போர்க்களத்தில் நாம் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியாது- இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

ஆஸ்திரியாவில் அந்த நாட்டு பிரதமர் கார்ல் நெகம்மரைச் சந்தித்துப் பேசிய மோடி, உக்ரைன் - ரஷ்யா விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து எடுத்துரைத்தார்.

இரண்டு நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆஸ்திரியா சென்றார் பிரதமர் மோடி.

இந்த நிலையில் நேற்றுப் புதன்கிழமை காலை ஆஸ்திரியா பிரதமரை, இந்தியப் மோடி சந்தித்தார். அப்போது, இரு தரப்பு உறவை மேம்படுத்துவது முதல் உக்ரைன் - ரஷ்யா போர் வரை பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதித்தனர். இதனைத் தொடர்ந்து, இரு தலைவர்களின் முன்னிலையில், இரு தரப்பு உறவை மேலும் மேம்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் தொடர்பில் இரு நாடுகளின் உயர் அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்தப்பட்டன. இதனையடுத்து, பிரதமர் மோடியும், ஆஸ்திரிய பிரதமரும் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

இதன்போது உரையாற்றிய பிரதமர் மோடி, உக்ரைன் - ரஷ்யா இடையிலான மோதலாக இருந்தாலும் சரி அல்லது மேற்கு ஆசியாவின் சூழ்நிலையாக இருந்தாலும் சரி, உலகம் முழுவதும் நடந்து வரும் மோதல்கள் குறித்து இருவரும் நீண்ட நேரம் பேசினோம். இந்தியாவும் ஆஸ்திரியாவும் பேச்சுகள் மற்றும் ராஜதந்திரத்தை வலியுறுத்துகின்றன. அதற்குத் தேவையான எந்த ஆதரவையும் வழங்கத் தயாராக இருக்கிறோம்.

இந்தியா மற்றும் ஆஸ்திரியா ஆகிய இரு நாடுகளும் பயங்கரவாதத்தை கடுமையாக கண்டிக்கின்றன. அது எந்த வடிவத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதை ஒப்புக்கொள்கிறோம். பயங்கரவாதத்தை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது- என்றார்.

# வில் மூலம் ஊடகவியலாளரின் மனைவி, பிள்ளைகள் கொலை

## பிரிட்டனில் அதிர்ச்சி சம்பவம்


பி. பி. சி. ஊடகவியலாளரின் (வர்ணணையாளர்) மனைவியும் இரண்டு மகள்களும் குறுக்கு வில் பயன்படுத்தி கொல்லப்பட்ட சம்பவம் பிரிட்டனில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஹேர்ட் போர்சையரில் உள்ள புசே என்ற பகுதியில் அவர்களது வீட்டுக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பி. பி. சியின் ஊடகவியலாளர் ஜோன் ஹன்ட் தனது வீட்டுக்குச் சென்ற வேளை தனது மனைவியும் இரண்டு பிள்ளைகளும் தாக்குதலில் காயமடைந்த நிலையில் உயிருக்காக போராடிக்கொண்டிருந்ததை அவதானித்துள்ளார். இதனையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர்கள் காயங்கள் காரணமாக உயிரிழந்தனர்.

அவர்கள் குறுக்கு வில் தாக்குதலினால் கொல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை இடம்பெற்ற பகுதிக்கு அருகில் நபர் ஒருவர் பாரியபொருள் ஒன்றுடன்



நடமாடும் சி. சி. ரிவி காட்சிகள் வெளியாகியுள்ளன.

பல மணிநேர தேடுதல் நடவடிக்கையின் பின்னர் 26 வயது நபரை கைது செய்துள்ளதாக தெரிவித்த பொலிஸார்,

குறுக்கு வில் பயன்படுத்தியே இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் எனக் கூறினர். ஏனைய ஆயுதங்களையும் சந்தேகநபர் பயன்படுத்தியிருக்க வாய்ப்புள்ளது எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

லண்டனுக்கு வடக்கே உள்ள என்பீல்ட் பகுதியில் குறுக்கு வில்லுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் காயங்களுக்காக சிகிச்சை பெறுகின்றார். கொல்லப்பட்டவர்களை அவருக்கு நன்கு தெரியும் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள நபர் பிரிட்டிஷ் இராணுவத்தில் சில காலம் பணியாற்றியவர் என்ற விபரம் வெளியாகியுள்ளது. 2019 இல் இராணுவத்தில் பணியாற்றியவர் என்று பொலிஸார் கூறினர்.

இந்தக் கொலைகள் பிரிட்டனில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. (எ)

# 500 கடைகள் தீக்கிரை!

இஸ்லாமாபாத், ஜூலை 12

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திலுள்ள சந்தையொன்றில் பரவிய தீயினால் 500 கடைகள் தீக்கிரையாகியுள்ளன.

"இத்வார் பஸார்" என அழைக்கப்படும் இந்த வாராந்த சந்தையிலேயே பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

சுமார் 25 ஏக்கர் பரப்பள வில் பரந்துள்ள இந்த வாராந்த சந்தையில் 2,700 இற்கும் அதிக மான கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன.




இச்சந்தையின் ஆடைகள் மற்றும் பாதணிகள் பிரிவில் தீ ஏற்பட்டதாகவும், விரைவில் ஏனைய பகுதிகளுக்கும் தீ பரவியதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பதற்கு காரணம் என்ன?

## சபையில் சஜித் கேள்வி



கொழும்பு, ஜுலை 12

**நாட்டில் இன்று துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.**

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

அதிகரித்துள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்வங்கள் காரணமாக இன்று நாட்டு மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாக அவர் சபையில் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாட்டில் மோதல்கள் அதிகரித்துள்ளன. நாட்டில் சட்டம் ஒழுங்கு முறையாக பேணப்படுகின்றதா என்ற சந்தேகம் மக்களுக்கு எழுந்துள்ளது.

நாட்டு மக்கள் இன்று அச்சத்துடனேயே வாழ்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கொலை சம்பவங்கள் நாட்டில் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.


நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்னவென்று நான் கேள்வி எழுப்புகின்றேன்.

நாட்டின் சட்டம் ஒழுங்கை பேணி, பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அரசியல் நோக்கங்களுக்கான இதனை கூறவில்லை-என்றார். (அ)

# தொழிற்சங்க தலைவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## பிரசன்ன ரணதுங்க கோரிக்கை


Prasanna

கொழும்பு, ஜுலை 12

மக்களை ஒடுக்கும் தொழிற்சங்க தலைவர்கள் தொடர்பில் உரிய அமைச்சர்கள் உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியுடன் அனைத்தையும் செய்ய முடியாது என்பதை அந்த மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும், அந்த நிலையை நாட்டு மக்கள் பெரும்பாலும் புரிந்து கொண்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

மேலும் சில தொழிற்சங்க தலைவர்கள் சில அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் எடுக்கும் தீர்மானங்களினால் மக்கள் அவதியுறுவதாகவும், ரயில் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல் காரணமாக பயணி ஒருவர் ரயிலில் இருந்து தவறி விழுந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)



# இலங்கையின் பொருளாதார மீட்சி; நியூசிலாந்து சபாநாயகர் பாராட்டு

கொழும்பு, ஜுலை 12

நியூசிலாந்து பாராளுமன்றத்தின் சபாநாயகர் கெர்ரி போன்லீ நேற்று முன்தினம் பிரதமர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பானது அலரி மாளிகையில் இடம்பெற்றிருந்தது. இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால நட்புறவைக் குறிப்பிட்ட பிரதமர், நியூசிலாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிக்கவும் கொழும்பு திட்டத்தின் கீழ் ஆதரவை அதிகரிக்கவும் அழைப்பு விடுத்தார்.

அத்துடன் 1958 ஆம் ஆண்டு கொழும்பு திட்ட மானியத்தின் கீழ் மஹரகமவில் இலங்கை பல் மருத்துவக் கல்லூரியை நிறுவியமைக்காக நியூசிலாந்துக்கு நன்றி தெரிவித்த பிரதமர், அதனை மேலும் மேம்படுத்துவதற்கு உதவி கோரினார்.

இதேவேளை இலங்கையின் விரைவான பொருளாதார மீட்சியை பாராட்டிய நியூசிலாந்தின் சபாநாயகர், இலங்கைக்கு தொடர்ச்சியான ஆதரவினையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாக உறுதி செய்தார். (அ)

# மைத்திரிக்கு எதிரான மனு: செப்ரெம்பர் 2இல் விசாரணை

கொழும்பு, ஜுலை 12

நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறி சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 02ஆம் திகதி பரிசீலிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மொண்டேகு சரத்சந்திர, நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சசி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளதாகக் தெரிவித்தே சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மொன்டேகு சரத்சந்திர இந்த மனுவை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆளுநர்கள் தன்னிச்சையாக செயல்பட்டு வருகின்றனர்

## விஜித ஹேரத் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுலை 12

ஆளுநர்கள் சிலர் வாகனங்களுக்காகவும், வெசாக் மற்றும் பொசன் போன்ற பல்வேறு விடயங்களுக்காகவும் பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்

குறிப்பாக சில ஆளுநர்கள் தமது தன்னிச்சையான அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆலோசகர்களை நியமித்துள்ளதாகவும், இத்தகைய தன்னிச்சையான நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் பாராளுமன்றத்தில் கூறினார்.

அத்துடன் மேல்மாகாண ஆளுநர் அரசாங்கத்தின் எந்தவொரு சுற்றறிக்கையையும் சட்டத்தையும் கருத்திற்கொள்ளாமல் தீர்மானங்களை மேற்கொள்கின்றார் எனவும்,

பொறிமுறையின்றி பல்வேறு விடயங்களுக்காக இலட்சக்கணக்கான ரூபாய் செலவிடப்படுவதாகவும், இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும், இல்லையெனில் அவர் இந்த சபைக்கு பதில் சொல்ல வேண்டிவரும் எனவும் விஜித ஹேரத் மேலும் குறிப்பிட்டார். (அ)

# ரயில் கட்டுப்பாட்டாளர்களின் புறக்கணிப்பு தொடர்கின்றது!

கொழும்பு, ஜுலை 12

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து புகையிரத நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்பு காரணமாக நேற்று காலையும் சில ரயில் சேவைகள் தடைப்பட்டன.

கடந்த 9ஆம் திகதி நள்ளிரவு முதல் ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இதேவேளை, வேலை நிறுத்தம் காரணமாக நேற்று பல ரயில் பயணங்கள் ரத்து செய்யப்பட்டதோடு ஒரு சில ரயில்கள் மட்டும் இயக்கப்பட்டதால் பயணிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர்.

மேலும் இந்த பணிப்புறக்கணிப்பால் பெம்முல்ல ரயில் நிலையத்திற்கு அருகில் பயணி ஒருவர் ரயிலில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

கொழும்பு புறக்கோட்டையில் இருந்து பொல்கஹவெல நோக்கி பயணித்த ரயிலில் இருந்தே அவர் தவறி விழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பழுதடைந்த மீன்களை அழிக்க நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஜுலை 12

காக்கைதீவு மீன் சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பழுந்தடைந்த மீன்கள், இறால்களை அழிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காக்கைதீவு சந்தையில் பழுதடைந்த மீன் மற்றும் இறால்கள் விற்பனை செய்யப்படுவதாக ஆனைக்கோட்டை பொது சுகாதார பரிசோதகருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தைக்கு சென்ற அவர் திடீர்ச் சோதனை நடவடிக்கைளை முன்னெடுத்தார்.

அதன்போது, விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பழுதடைந்த மீன்கள் மற்றும் இறால்கள் ஒரு தொகையை அவர் மீட்டிருந்தார்.

அவற்றை நீதிமன்றில் சான்றுப் பொருட்களாக பாரப்படுத்தி வழக்கு தாக்கல் செய்திருந்த நிலையில் பழுதடைந்த மீன்கள் மற்றும் இறால்களை அழிக்குமாறும் உத்தரவிட்ட மன்று, வழக்கு விசாரணைக்கு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 08ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரதமர்...

நிர்மாணிக்கப்பட்ட புதிய தபால் நிலைய கட்டிட திறப்பு விழாவிலும், குருநகரில் மீனவர் குடும்பங்களுக்கு மீன்பிடி சாதனங்கள், உலர் உணவு வழங்கும் நிகழ்விலும் பங்கேற்பார்.

இதைத் தொடர்ந்து, யாழ்.பொது நூலக கேட்போர்கூடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வில் பங்கேற்பார்.

பிற்பகல்வேளை கிளிநொச்சிக்கு செல்லும் அவர், மாவட்ட செயலகத்தில் புதிய வர்த்தக சேவை நிலையத்தை திறந்து வைப்பார். அத்துடன், மாவட்ட அபிவிருத்தி குழுவின் கூட்டத்திலும் பங்கேற்பார். (ஐ)

## வெளிநாட்டில்...

இடம்பெற்றது. இதில் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியவரே உயிரிழந்தார். படுகாயமடைந்த மூவரும் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை தரப்பு தெரிவித்தது.

ஹைஏஸ் வாகன சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கமே விபத்துக்குக் காரணம் என்று பொலிஸார் கூறினர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் நடத்தி வருகின்றனர். (ஐ)

## தற்கொலை...

பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தலைமையில் மருத்துவர்கள் பங்கேற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் மேலும் கருத்து வெளியிட்ட மருத்துவர் நவநீதன்,

தற்கொலைகள், தற்கொலை முயற்சிகள் அதிகரித்து வருகின்றன. யாழ். போதனா மருத்துவமனையில் 750 முதல் ஆயிரம் பேர் வரையிலானவர்கள் தற்கொலை முயற்சியால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இந்த நிலையில், 75 - 100 பேர் வரையிலானவர்கள் தற்கொலை செய்து கொண்டனர் என்றும் கூறினார். (ஐ)

## அதிகரிக்கும்...

ஏற்படாது அவதானமாக செயல்பட வேண்டும் என்று யாழ். போதனா மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மருத்துவ நிபுணர் க. மணிதீபன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தலைமையில் மருத்துவர்கள் பங்கேற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் மேலும் கருத்து வெளியிட்ட மருத்துவர் மணிதீபன்,

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 1350 படுக்கை வசதிகளும் அவசர சிகிச்சைப் பிரிவில் 20 படுக்கை வசதிகளுமே உள்ளன. ஆனால், கடந்த ஆண்டில் வீதிவிபத்துகளால் 2 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சேர்க்கப்பட்டனர். ஏனைய விபத்துகளால் 17 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரையானவர்கள் சேர்க்கப்பட்டனர்.

இந்த நிலையில், கடந்த ஆண்டில் 100 பேர் வரையில் வீதி விபத்துகளால் உயிரிழந்தனர். இதேபோன்று, இதர விபத்துகளால் 200 பேர் வரையில் உயிரிழந்தனர். இவ்வாறு விபத்துகளுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்கள் 16 - 40 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். இவர்களில் பலர் உத்தியோகத்தர்களாவர்.

பொதுமக்கள் அவதானமாகவும் அறிவுபூர்வமாகவும் செயல்படுவதன் மூலம் முடிந்தவரை விபத்துகளை தவிர்த்துக்கொள்ள முடியும். பொதுமக்கள் விபத்துகள் தொடர்பில் விழிப்புடன் செயல்பட வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## விபத்தில்...

சைக்கிள் விபத்துக்குள்ளானது.

இதில், படுகாயமடைந்த அவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கடந்த வாரம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அவர் மாற்றப்பட்டார். இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை அதிகாலை அவர் உயிரிழந்தார்.

இவர், கடந்த 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் பருத்தித்துறை நகர சபைக்கு தெரிவாகியிருந்தார். உள்ளூராட்சியின் பதவிக்காலம் முடிவடைய முன்னதாக சில மாதங்கள் பருத்தித்துறை நகர சபையின் தவிசாளராகவும் அவர் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ - 02)

## சீனாவுடனான...

கருத்தில் கொண்டு, சீனாவுடனான தங்களின் உறவுகளை மேலும் ஆழப்படுத்த இலங்கை முயற்சிக்க வேண்டும் என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷென்ஹொங் தெரிவித்துள்ளார்.

சீனாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் இலங்கை பயனடைய முடியும் என்றும் அவர் கூறினார்.

இலங்கை - சீன வர்த்தக சபையின் 23ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுகளை முன்னெடுப்பதில் எந்தத் தயக்கமும் இருக்கக் கூடாது. குறைந்த வருமானம் கொண்ட நாடான கம்போடியா 2020 ஆம் ஆண்டு சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் மூலம் பெரும் நன்மைகளை அடைந்துள்ளது என்றும் சீனத் தூதுவர் குறிப்பிட்டார். (ஐ)

## ரவிராஜ்...

செய்வது தற்போதைய அரசாங்கத் தின் பொறுப்பாகும். இந்த விவகாரம் நாட்டின் பாதுகாப்பு தொடர்பான பெரும் பிரச்னையாக மாறியுள்ளது. இதற்கு அரசாங்கம் எடுத்துள்ள அல்லது முன்வைக்கும் தீர்வு யாது?

சமூகத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதன் மூலம் வன்முறையை ஒழிக்க எதிர்க்கட்சி பூரண ஒத்துழைப்பை வழங்கும். வன்முறைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் கொண்டுள்ள திட்டம் என்ன? இது குறித்து பேசுவதற்கு நான் பயப்படவில்லை. இது பேசப்பட வேண்டிய தலைப்புத்தான். வன்முறைகள் காரணமாக.நாட்டின் பொது மக்கள் பல பிரச்னைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். பொதுமக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். இவ்வாறான வன்முறைகளை வைத்துக் கொண்டு ஒரு நாட்டால் முன்னேற முடியாது.

சமூகத்தில் சட்டத்தின் ஆட்சி வலுவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நாட்டில் நடக்கும் வன்முறைகளுக்கு எதிராக பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களும் ஒரே கருத்தில் இருக்கின்றனர் என்றே நான் நினைக்கிறேன். அரசாங்கம் தனது பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும்.

ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம், மகேஸ்வரன் ஆகியோரை கொன்றவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். கீத் நொயர், உபாலி தென்னகோன் போன்ற ஊடகவியலாளர்களை தாக்கியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். லசந்த விக்கிரமதுங்கவின் சிறந்த நண்பர் தற்போது நாட்டின் ஜனாதிபதியாகியுள்ளார். என்றாலும் லசந்த விக்ரமதுங்கவுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை - என்றும் தெரிவித்தார். (ஐ)

# ஜனாதிபதி புலமைப்பரிசில் இன்று முதல் வழங்கப்படும்!

## யாழில் நாளை ஆரம்பம்

க.பொ.த உயர்தரம் மற்றும் முதலாம் தரம் முதல் 11ஆம் தரம் வரை கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் உதவித் தொகையை இன்று வெள்ளிக்கிழமை முதல் மாவட்ட மட்டத்தில் செயல் படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, பதுளை, மாத்தளை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் நாளை 13ஆம் திகதியும் கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை மறுதினம் 14 ஆம் திகதியும், வவுனியா, மட்டக்களப்பு, இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, களுத்துறை, மன்னார், அம்பாறை, குருநாகல், கண்டி மாவட்டங்களில் எதிர்வரும் 17ஆம் திகதியும் முல்லைத்தீவு, திருகோணமலை, பொலன்னறுவை மாவட்டங்களில் எதிர்வரும் 18ஆம் திகதியும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 15ஆம் திகதியும், கம்பஹா மாவட்டத்தில் 16, 17ஆம் திகதிகளிலும், காலி மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் எதிர்வரும் 15, 16ஆம் திகதிகளிலும்,

மொனராகலை, மாத்தறை மாவட்டங்களில் 19ஆம் திகதியும், புத்தளம் மாவட்டத்தில் 22ஆம் திகதியும் புலமைப் பரிசில்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## கொக்குத்...

நேற்றைய தினம் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் அகழ்வு பணிகள் தொடர்ந்திருந்தன. நேற்றும் ஐ. நா.வின் பிரதிநிதி கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தார்.

கடந்த இரு கட்ட ஆய்வுகளிலும் மீட்கப்பட்ட 40 எலும்புக்கூடுகளுக்கு மேலதிகமாக இரண்டாம் கட்டம் - மூன்றாம் கட்ட ஆய்வுகளில் அடையாளம் காணப்பட்ட 7 எலும்புக்கூடுகளில் 3 எலும்புக்கூடுகள் நேற்று முழுமையாக எடுக்கப்பட்டன. இந்த எலும்புக்கூடுகளின் பற்கள் மரபணு பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பணிநீக்க...

சம்பள உயர்வு கோரிக்கையை முன்வைத்து ரயில் நிலைய அதிபர்கள், நேரக் கட்டுப்பாட்டாளர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தனர். இதனால், அரசாங்கத்துக்கு சுமார் 10 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக போக்கு வரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், "பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டவர்களாக் கருதப்படுவர்" என்று குறிப்பிட்டு ஆயிரம் பேருக்குக் கடிதம் அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, புகையிரத கட்டுப்பாட்டாளர்கள், நிலைய அதிபர்கள் சங்கத்தின் அதிகாரிகள் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கும் புகையிரத கட்டுப்பாட்டாளர்கள், நிலைய அதிபர்கள் தொழில்சங்கங்க ளுக்கும் இடையே ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டது.

இதற்கமைய, நேற்றைய தினத்துக்குள் அதாவது நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் பணிக்கு சமுகமளிக்கும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாது என்று அமைச்சர் உறுதியளித்தார்.

இதைத் தொடர்ந்து, ரயில் நிலைய அதிபர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் உடன் முடிவுக்கு வருவதாக நேற்றிரவு ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் அறிவித்தார்.

இதையடுத்து ரயில் சேவைகள் வழமைக்குத்திரும்பின. (ஐ)

## வடக்கு...

நேற்று அவர் விடுத்திருந்த ஊடக அறிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரால் இனங்காணப்பட்டு - அரசியல் தலைவராக இருந்து இயற்கை எய்திய சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுப்பெடுத்து நடத்துவார் என்ற நம்பிக்கையில் கட்சி அவரிடம் கையளிக்கப்பட்டது. இரண்டாம் கட்டத் தலைவர்கூட இல்லாமல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ் அரசுக் கட்சி என அனைத்தும் இன்று சிதறடிக்கப்பட்டுள்ளன.

உருளைக்கிழங்கு மூடை எல்லாம் கட்டவிழ்த்து ஓடி விட்டது என்று கூறுகின்ற நடப்புகளும் உள்ளன. தலைவர் பிரபாகரன் கூறிய வார்த் தையை தற்போது அமைச்சராக உள்ள டக்ளஸ் நையாண்டியாக கூறியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரால் கட்டப்பட்ட மூடை கட்டவிழ்ந்தது உண்மைதான். அதனால்தான் அதனை கட்டுவதற்கு நான் வந்திருக்கின்றேன். இனி எங்களுக்கு கீழ் வடக்கு - கிழக்கு அரசியல் நடவடிக்கை நடைபெறும் என்பதை ஆணித்தரமாக கூறுகிறேன்.

15 வருடங்கள் நான் பொறுமையாக இருந்தேன். எங்களால் கையளிக்கப்பட்ட அரசியல் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரால் மக்களின் எதிர்காலம் - பொருளாதாரம், மக்களின் வாழ்வு என்பவற்றை 30 வருட கால யுத்தத்தின் பின்னர் வளர்த்தெடுக்கும் நிலையே இருந்தது.

இங்கு திருடுவதும் சாப்பிடுவதுமான நிகழ்வுதான் நடந்தது. இன்றுங்கூட அவர்கள் பிரிந்து போகவே இருக்கின் றார்கள். அவிழ்த்துவிடப்பட்ட மூடையைக் கட்ட வேண்டிய கடப்பாடு எனக்கு மட்டுமே உள்ளது. இது கருணா அம்மான் காலம் எல்லோரும் எதிர்பார்த் திருங்கள். சிறிய அரசியல் கட்சிகள், சுயேச்சை குழுக்கள் என அனைவரும் எம்மோடு இணைய வேண்டும்" - என்றுள்ளது

## இந்தியா...

கடல்மலை பகுதியில் உள்ள கோபல்ட் தனிமம் குறித்து ஆய்வில் ஈடுபட கிங்ஸ்டன் ஜமைக்காவில் உள்ள சர்வதேச கடற்படுக்கை அதிகார சபையி டம் இந்தியா விடுத்துள்ள வேண்டுகோளுக்கு இலங்கை எதிர்ப்பு தெரிவித்தது. இதைத் தொடர்ந்தே இரு நாடுகளுக்கும் இடையே இந்த விடயம் தொடர்பில் சர்ச்சை மூண்டுள்ளது என்று இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இந்தியா கோபல்ட் தனிமம் குறித்து ஆய்வில் ஈடுபட விரும்பும் பகுதி தனது விரிவாக்கப்பட்ட கண்ட அடுக்குக்குள் உள்ளது என்று இலங்கை தெரிவித்துள்ளது. அத்துடன், கண்ட அடுக்கின் வரம்புகள் குறித்த ஐக்கிய நாடுகளின் ஆணைக்குழு தனது கண்ட அடுக்கு வேண்டுகோள் குறித்து தீர்மானிக்கும் வரை புதுடில்லியின் வேண்டுகோளை ஏற்கக் கூடாது என்றும் இலங்கை கூறியுள் ளது.

இலங்கையின் கண்டமேடை கோரிக்கைகள் இந்தியாவின் கோரிக்கையுடன் முரண்படுகின்றன. இதனாலேயே 2009 முதல் இந்த விவகாரத்துக்கு தீர்வு காணமுடியாத நிலையில் ஐ. நாவின் கண்ட அடுக்குகள் வரம்பு குறித்த ஆணைக்குழு உள்ளது.

இந்த முட்டுக்கட்டை நிலைக்கு இரு தரப்பு தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் இரு நாடுகளும் உள்ளன. எனினும் கடந்த ஒன்றரை தசாப்தங்களாக அது சாத்தியமாகவில்லை.

இந்தியாவில் அண்மையில் நடந்த பொதுத் தேர்தல் பிரசாரத்தின்போது, பா. ஐ. க., தமிழ்நாடு மீனவர்களின் நலன்களை புறக்கணித்துவிட்டு காங்கிரஸ் கட்சியும் தி. மு. கவும் இலங்கைக்கு கச்சதீவை தாரைவார்த்தது குறித்து எழுப்பிய சர்ச்சையை தொடர்ந்தே கோபல்ட் தொடர்பான சர்ச்சை மீண்டும் சூடுபிடித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## 13 இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 12

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறிய மீன் பிடித்த 13 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

காரைநகர் கடற்பரப்பில் அதிகாலை மீன்பிடித்துக் கொண்டிருந்த 3 படகையும் அதிலிருந்த 13 இந்திய மீனவர்களையும், எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச் சாட்டில் இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்

கைதான மீனவர்களை மயிலிட்டி மீன்பிடி துறை முகத்திற்கு அழைத்துச் சென்று, யாழ்.மாவட்ட கடற் றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் கையளிக் கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சட்டமா அதிபராக பாரிந்த ரணசிங்க!

கொழும்பு, ஜூலை 12



ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்கவை சட் டமா அதிபராக நியமிப்பதற்கு அரசி யலமைப்புப் பேரவை ஏகமனதாக அங்கீகா ரம் வழங்கியுள்ளதாக சபா நாயகர் மஹிந்த யாப்பா அபேவர் தன தெரிவித்துள்ளார்.

சபாநாயகரின் தலைமையில் அரசியலமைப்பு பேரவை நேற்று கூடியபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளது.

அதற்கமைய, அரசியலமைப்புப் பேரவையின் தீர்மா னம் தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுத்துமூலம் அறிவிக் கப்படும் என சபாநாயகர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க, அண்மை யில் பதில் சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு நாங்கள் தயார் நிலையில்!

### எதிர்க்கட்சிகளுக்குத்தான் விருப்பம் இல்லை என்கிறார் அமைச்சர் காஞ்சன



கொழும்பு, ஜூலை 12

**ஜனாதிபதித் தேர்தலை பிற்போடும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை. மாறாக தேர்தலைப் பிற்போடும் தேவை எதிர்க்கட்சிகளுக்கே உள்ளாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித் தார்.**

**பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றுவரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ் வாறு கூறினார்.**

தொடர்ந்து உரையாற்றிய சஜித் பிரேமதாச,

ஜனாதிபதித் தேர்தலை உரிய காலப்பகுதியில் நடத் துமாறு எதிர்க்கட்சிகள் கோருகின்றன. தேர்தலை நடத் துவதற்காக அரச தரப்பில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுத் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அறிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் நீதிமன்றில் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு வருடங்கள் அல்ல ஐந்து வருடங்கள்தான் என கூறியிருந்தார். நீதிமன்றத் தீர்ப்பும் உள்ளது. இவ்வா றான சூழலில் நாட்டு மக்களது பிரச்னைகளை வேறு பக்கம் திசை திருப்பும் நோக்கில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விடயத்தை கையில் எடுத்துள்ளனர்.

அரசாங்கம் தேர்தலை பிற்போட நடவடிக்கை எத னையும் எடுக்கவில்லை. மாறாக எதிர்க்கட்சிகளின் ஆத ரவுடன் செயல்படும் தொழிற்சங்கங்களே போராட்டங் கள் ஊடாக தேர்தலை நடத்துவதற்கு தடைகளை ஏற்ப டுத்தி வருகின்றன.

தேர்தல் நடைபெற கிராம சேவகர்கள், தபால் திணைக் களம் மற்றும் போக்குவரத்து துறையினரின் பங்களிப்பு அவசியமாகும். இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டால் தேர்தல் நடத்துவதில் பாதிப்புகள் ஏற்படலாம்.

தேர்தல்கள் ஆணைக்குழுவை சந்தித்த பெப்ரல் அமைப்பு, ஜனாதிபதித் தேர்தலை நடத்த நிதி ஒதுக்கீடு கள் முதல் அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு கூறியதாக தெரி வித்துள்ளது.

சட்டத்தில் சிக்கல்கள் இல்லாத சூழலில் அரசாங்க மும், தேர்தல்கள் ஆணைக்குழுவும், தேர்தலை நடத்த தயார் நிலையில் இருக்கும் சூழலில் எதிர்க்கட்சிகள் எதற்காக எவ்வாறான பிரேரணைகளை கொண்டுவரு கின்றன?.

மக்களின் பிரச்னைகளை மறைத்து தேர்தல் தொடர் பான எண்ணங்களை உருவாக்குவதே இவர்களது நோக் கம்.

தேர்தலை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளது. தேர் தல்களை பிற்போட நாங்கள் கை உயர்த்த மாட்டோம். எதிர்க்கட்சியினருக்கு தேர்தல்களை பிற்போட கை உயர்த்தி பழக்கம் உள்ளது- என்றார். (அ)

## ஹிருணிகாவின் பிணை மனுவை பரிசீலனைக்கு எடுக்கத் தீர்மானம்!

கொழும்பு, ஜூலை 12

கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர, தம்மை பிணையில் விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்துள்ள மனுவை, ஜூலை 15 இல், பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பிணை விண்ணப்பத்திற்கு எதி ராக சட்டமா அதிபர் எழுத்துமூல சமர்ப்பணங்களை முன்வைத்தார். எனவே, இந்த வழக்கை ஜூலை 15 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடிவு செய்யப் பட்டது.

தெமட்டகொடையில் டிபெண்டர் வாகனத்தை பயன்படுத்தி இளைஞர் ஒருவரை கடத்தி, தாக்குதல் நடத்தியதுடன் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை உள் ளிட்ட 18 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள வழக்கி லே ஹிருணிகா பிரேமச்சந்திர குற்றவாளியாகக் காணப் பட்டார்.

ஹிருணிக்கா பிரேமச்சந்திர இந்த வழக்கில் ஒன்பதா வது குற்றவாளியாவார். அவர் குற்றமற்றவர் எனத் தெரி வித்ததால், அவருக்கு எதிராக குற்றவியல் வழக்கு தாக் கல் செய்யப்பட்டது.

இதில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஹிரு ணிக்கா பிரேமச்சந்திரவுக்கு மூன்று ஆண்டுகள் கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 20 ஆயிரம் ரூபா தண்டப் பண மும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (அ)

## பாடசாலை அதிபர்கள் பிரச்னை; விசாரிக்க விசேட குழு நியமனம்



கொழும்பு, ஜூலை 12

பாடசாலை அதிபர்களின் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரே மஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றில் எதிர்கட்சி தலைவர் எழுப்பிய கேள் விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாடசாலை அதிபர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் தொடர்பாக தாம் தொடர்ச்சியாக அவதானம் செலுத்தி வருகின்றோம்.

இந்த விடயம் தொடர்பாக நான் அமைச்சரவை பத்திரமொன்றை தாக்கல் செய்துள்ளேன். ஆசிரியர் தரத்தில் இருக்கும் ஒருவர் அதிபர் தரத்திற்கு தகுதியின் அடிப்படையில் மாற்றப்படும் போது அவர்களின் அடிப்படை கொடுப்பனவு குறைவடைகின்றது. இது காலம் காலமாக இருந்து வரும் பிரச்னையாகும்.

மேலும் தொடர்பாடல் கொடுப்பனவு மற்றும் போக் குவரத்து கொடுப்பனவுகளை திறைசேரியின் உதவியுடன் பெற்றுக்கொடுப்பதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது -என்றார். (அ)

## அத்தியாவசிய சேவை சீர்குலைவை தடுப்பதற்கு விரைவில் புதிய சட்டம்?

கொழும்பு, ஜூலை 12

சுகாதாரம், கல்வி, போக்குவரத்து உள்ளிட்ட அத்தி யாவசிய சேவைகளை சீர்குலைக்கும் முயற்சிகளை தடுப் பது குறித்து கவனம் செலுத்தப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை பேச்சாளர் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இந்த விடயம் குறித்து தக வல் வெளியிட்டார்.

புதிய சட்ட ஏற்பாடுகளின் மூலம் இவ்வாறான நாச வேலைகளை தடுத்து நிறுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு தேவையான அத்தி யாவசிய சேவைகளை குழப்புவதை தடுப்பதற்கு அரசாங் கம் தலையீடு செய்யக்கூடிய வகையில் சட்ட ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் கூறினார்.

இது தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ள உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த புதிய ஏற்பாடுகளின் ஊடாக மக்கள் அச்சமின்றி தங்களது அன்றாட வாழ்க்கையை முன்னெடுக்கவும் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடி யும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

மக்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு ஒன்று வழங் குவதற்கு கவனம் செலுத்தப்படுவதாக அவர் தெரிவித் தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org